விலை சதம் 50

பக்கங்கள்—8

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், மொம்பே சுவீட்ஸ்

றிக்கோ பீடா வகைகளுக்கும்

றிக்கோஹோட்டல்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

# ஈழநாடு
## வார மலர்
THE EELA NADU VARAMALAR

'மில்க்வைற் செய்தி'
இதழ்—24

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மெடிக் கேட்டற் சோப் அல்லது 2 பார் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தி இதழைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விநியோகப்பகுதி
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.

மலர் 19 | கார்த்திகை 26 | ஜுலைஜ் 29 | ஞாயிற்றுக்கிழமை | [11—12—77] | இதழ் 301

# காங்கேசன் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யுங்கள்

## சீமெந்தின் உற்பத்திச்செலவு குறையும் என்கிறார் 'அமிர்'

(கொழும்பு)

இரண்டுகோடிரூபா செலவில் அபிவிருத்தி செய்ய திட்டமிட்டுள்ள காங்கேசன்துறை துறைமுகத்தை உடன் அபிவிருத்தி செய்யுங்கள். 1968ம் ஆண்டு காலஞ்சென்ற திரு. டட்லி சேனநாயக்காவினால் அடிக்கல்நாட்டப்பட்ட இத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதன்மூலம் காங்கேசன் சீமெந் தின் உற்பத்திச் செலவை மூன்றில் ஒருபங்கு குறைக்க முடியும்.

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் [illegible] பேரவையில் கூறினர்.

[illegible] பேரவையில் கூறியதாவது:

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னரே காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று பல ஆட்சிமன்ற உறுப்பினர்களும் மற்றும் பலரும் வற்புறுத்தி வந்தபோதிலும் எந்த அரசும் அக்கறைகொள்ளவில்லை.

இத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதனுல் சீமெந்தின் உற்பத்திச் செலவு குறைவது மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரமும் அபிவிருத்தி அடையும்.

### பலாலி விமானநிலையம்

நாட்டின் இரண்டாவது பெரிய விமான நிலையமான பலாலி விமானநிலையத்தின் ஓடுபாதை சாதாரண விதிக

[8-ம் பக்கம் பார்க்க]

## திருமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்க —சம்பந்தன்

[கொழும்பு]

உலகப் பிரசித்திபெற்ற துறைமுகங்களில் ஒன்ருன திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்திசெய்யும் பட்சத்தில் நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி அடைவதுடன் கொழும்புத் துறைமுக ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் தாமதமாவதனுல் வழங்கப்படும் மேலதிக கப்பல் கட்டணங்களும் மீதப்படுத்தப்படும்.

இவ்வாறு திருக்கோணமலை எம். பி. திரு. சம்பந்தன் பேரவையில் கேட்டுக்கொண்டார்.

1971 ம் ஆண்டு திருமலையில் இரண்டு இறங்குதுறைகளை அமைக்க அரசு திட்டமிட்டிருந்த போதிலும் இன்னும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் கூறிய திரு. சம்பந்தன், அரசு மேலும் பல கப்பல்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று கூறினர். [ம-இ]

## ஐதேக கூட்டத்தில் கனகரத்தினம்!
### ஜே. ஆருக்கு புகழாரம்

[கொழும்பு]

பொத்துவில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. திரு எம். சி. கனகரத்தினம் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியதுடன் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவையும் பாராட்டிப் பேசியுள்ளார்.

பொரளையில் நேற்றுமுன் தினம் மாலை அரசாங்கத்தின் 'பட்ஜட்' நன்மைகள் பற்றி எடுத்துக் கூறுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியினுல் நடத்தப்பட்ட கூட்டத்திலேயே திரு கனகரத்தினம் கலந்துகொண்டு பேசினர்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமக்கு 25 வருட காலமாக உறவு உண்டென்றும் பிரதமர் திரு ஜே. ஆர், ஜெயவர்த்தன மிகச் சிறந்த தலைவர் என்றும் அவரின் தலைமையிலேயே இந்த நாட்டின் பொருளாதாரம் மேம்படும் என்றும் திரு கனகரத்தினம் அக்கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறியுள்ளார்.

திரு. கனகரத்தினம் 'பட்ஜட்'டுக்கு ஆதரவாக வாக்களித்ததை அடுத்து அவர் கூட்டணியிலிருந்து தற்காலிகமாக வெளியேற்றப்பட்டது தெரிந்ததே. [ம-இ]

விவசாயிகளே!

உங்களது

நெல், உழுந்து ஆகிய பயிர்களைத் தாக்கும் பயிர் நோய்களை

அக்ரோத்தியோன் 50

கிருமிநாசினியை

உபயோகித்து கட்டுப்படுத்தி விளைவைப் பெருக்குங்கள்.

மேலதிக விபரங்கட்கு:

த ரோரு லிமிட்டெட்,

32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 7651

## பம்பாய் வெங்காயம் யாழ்ப்பாணம் வரும்

[யாழ்ப்பாணம்]

பம்பாய் வெங்காயத்தை மலிவான விலையில் பாவனையாளர்களுக்கு வழங்க யாழ்ப்பாணம் விற்பனை இலாகா முயற்சிஎடுத்துவருகிறது.

தற்பொழுது கொழும்பில் உள்ள விற்பனை இலாகா கடைகளில் வெங்காயம் மலிவுவிலையில் விற்பனைசெய்யப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்திற்கு இன்னும், வெங்காயம் வந்துசேரவில்லையென்றும், வெங்காயத்தைப் பெறுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகவும் விற்பனை இலாகா உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (க. இ)

## ஜே. பி, பதவிகள் ரத்து

(கொழும்பு)

முன்னைய அரசாங்கத்தினரால், எந்தவித நேர்முகப் பரீட்சையுமின்றி நியமிக்கப்பட்ட 2,347 பேரின் சமாதான நீதிபதி நியமனங்கள் ரத்துச்செய்யப்படும். இத்தகவலை பிரதி நீதியமைச்சர் திரு. ஷெல்டன் ரணசிங்கா நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில் புற்று நோய் சிகிச்சைப் பிரிவு!
### அவசியம் தேவை என யோகேஸ் வலியுறுத்தல்

[கொழும்பு]

புற்றுநோய்க்கான 'கோபால்ட்' சிகிச்சைப் பகுதியை யாழ்ப்பாணத்தில் உடன் ஆரம்பித்து வடபகுதி புற்று நோயாளர்களுக்கு விமோசனம் அளிக்குமாறு யாழ். எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் தேசிய அரசுப் பேரவையில் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் இந்தச் சிகிச்சைப் பிரிவு இல்லாமையால் வட பகுதி புற்றுநோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக மகரகமவுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனுல் நோயாளர்கள் பெரும் கஷ்டம் அனுபவிக்க வேண்டி நேரிடுகிறது என்றும் கூறிய திரு. யோகேஸ்வரன், நீண்ட நாள் கோரிக்கையான இந்த சிகிச்சைக்குரிய இயந்திரசாதனங்களை உடன் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பும்படியும் கேட்டுக்கொண்டார்.

### டாக்டர்களுக்குச் சலுகை

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

உள்ளூரில் கல்வி கற்கும் டாக்டர்கள் இங்கு 6 ஆண்டுகள் சேவையாற்ற வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இந்தக்கட்டுப்பாட்டினுல் வெளிநாட்டில் இருப்பவர்களை மணமுடிக்கும் பெண் டாக்டர்கள் 6 ஆண்டுகளுக்கு தமது கணவருடன் இணைந்து வாழமுடியாத நிலை ஏற்படுகிறது. எனவே அரசு அவர்களுக்கு சலுகைகள் வழங்க வேண்டும்.

### தாதிகளுக்கு...

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் தாதிகள் திறம்பட சேவை புரிகிருர்கள் ஆனுல் அவர்களுக்குப் போதிய சம்பளம் வழங்கப்படுவதில்லை. சுகாதார அமைச்சு இவ்விடத்தில் கவனம் எடுக்கவேண்டும். (இ)

# ஆறும் மலைகளும் இல்லாததால் நமக்கு வெள்ளமில்லை!

ஆந்திரப் பிரதேசத்தில் கடும் புயலினாலும், மழையினாலும், வெள்ளத்தினாலும் கணக்கிடமுடியாத பொருட்சேதமும், உயிர்ச்சேதமும் ஏற்பட்டுச் சனங்கள் மிகவும் துன்பத்திற்குள்ளாயினர்.

இலங்கையின் தென்பகுதியில் பெரிய ஆறுகள், குளங்கள் முதலியன உடைத்துப் பெருகி நீரினால் பெரிய சேதமும் இடைக்கிடை ஏற்படுவதுண்டு. மலைகள் இடிந்து விழுந்து நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலியெடுப்பதுண்டு.

எங்கள் யாழ்ப்பாணத்திலிருக்கும் வழுக்கையாறு தொண்டமானாறு முதலிய ஆறுகள் மிகவும் நல்ல ஆறுகள். அவை ஒருநாளும்பெருக்கெடுப்பதில்லை. எங்கள் கிரிமலை, சுதுமலை முதலிய மலைகள் நல்ல மலைகள். அவை கண்டிநாட்டு மலைகளைப்போல் இடிந்துவிழுந்து, மண்சரிவுகளை உண்டாக்கி, மனிதரின் வீடுகளை அழித்து, அவர்களின் உயிர்களைப் பலியெடுப்பதில்லை, எங்கள் புங்கங்குளம், ஆரிய குளம், சங்கரத்தைக் குளம் முதலிய குளங்கள் நல்ல குளங்கள். அதை பெருக்கெடுத்து நட்டங்களை உண்டாக்குவதில்லை. யாழ்ப்பாணக் குடாக்கடல் (Jafina Lagoen) கொந்தளித்து எழுந்து கிராமங்களை அழிப்பதுமில்லை. இதெல்லாம் எங்கள் முன்னோர்கள் செய்த தவப்பயன் என்றே சொல்லவேண்டும்.

"ஆதியாம் கடவுள் எந்தை
ஆலவாய் அம்லன் மங்கை
பாதியாம் சிறந்த பூசை
பண்டையிற் குறைய"
வில்லை.

பண்டையில் எங்கள் முன்னோர்கள் பூசையைக் குறைவில்லாமல் செய்தார்கள். நாங்களும்,

"நீதியாம் தவத்தின்
மிக்கார் நெஞ்சகம்
புழுங்க
மண்மேல் தீது செய்வ"
தில்லை

ஆனபடியால் எங்களில் அனேகர் நீரினால் ஏற்படும் ஆபத்துக்களையும், விபத்துக்களையும் கண்ணால் கண்டிருக்கக்கூடமாட்டார்கள்.

முன்னொருகாலத்தில் காவேரியாறு பெருக்கெடுத்து எத்தனையோ கிராமங்களை அழித்த நேரத்தில் எத்தனையோ பேர் மாண்டார்கள். சிலர் நீந்தியும்; நீந்தத்தெரியாதவர்கள் கையில் அகப்பட்ட மிதக்கக்கூடிய ஒரு பொருளின் உதவியோடும், நீந்தத்தெரிந்தவர்களின் உதவியோடும், மரங்கள், வீடுகள் முதலானவற்றின் மேல் ஏறியிருந்தும் உயிர் பிழைத்தார்கள்.

இப்படி 'பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மேலாக' மனிதரும் மிருகங்களும் பதைதைத்து மிதந்துபோன நேரத்தில் நீந்தத்தெரிந்த ஓர் இளைஞன், நீந்தத் தெரியாத தனது தம்பி எதையோ பிடித்துக் கொண்டு நீந்தி வருவதைக்கண்டான். உடனே அவன் "என்னடாதம்பி? எதைப்பிடித்துக் கொண்டு நீந்துகின்றாய்?" என்றுவினவினான் "அண்ணா! நான் நீரில் மூழ்கி இறந்து விடுவேனோ என்று அஞ்சின நேரத்தில் உனதுகையில் இந்தக் கறுத்தக் கம்பளிமூட்டை மிதந்து வந்து அகப்பட்டது. யாருடையதோ தெரியாது. நன்றாகமிதக்கின்றது. அதைப் பிடித்துக்கொண்டு மிதக்கின்றேன்" என்று தம்பியானவன் சொன்னான். அதற்கு மற்றவன் "நல்லகாரியம் தம்பி, பற்றிக்கொள் கம்பளி மூட்டையைக் கைவிட்டு விடாதே,' என்று சொன்னான் இருவரும் தப்பிப் பிழைத்து "அதோ நிலம் தெரிகின்றது!" என்று

(8ம் பக்கம் பார்க்க)

## ஆனைக்கோட்டை 'திருவன்'

---

க.பொ. த. (சாதாரண)பரீட்சைகள்-1977

## தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்

### பரீட்சை நிலைய மாற்றங்கள்

· தவிர்க்க முடியாத காரணங்களினால் கீழே 'அ' கலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைநிலையங்கள் ரத்துச் செய்யப்பட்டு, அவற்றிற்கு 'ஆ' கலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய பரீட்சை நிலையங்களில் மேற்படி பரீட்சை நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

2. 'அ' கலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களுக்கு சமூகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் அவற்றிற்கு எதிரே 'ஆ' கலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைநிலையங்களில் பரீட்சைக்குத் தோன்றுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

| 'அ' கலம் ரத்துச்செய்யப்பட்ட பரீட்சை நிலையம் | 'ஆ' கலம் புதிய பரீட்சைநிலையம் |
|---|---|
| 1. யா / கிளிநொச்சி சிங்கள மகாவித்தியாலயம் | 1. யா/கிளிநொச்சி மகா வித்தியாலய 2 வது மண்டபம் |
| 2. யா / வண். நாவலர் மகாவித்தியாலயம் | 2. யா / சிங்கள மகா வித்தியாலயம். |

இப்பரீட்சை நிலைய மாற்றங்கள் பரீட்சை ஆணையாளரின் அறிவுறுத்தலின்படி செய்யப்பட்டுள்ளது.

ஒப்பம்/ தி. மாணிக்கவாசகர்,
வடமாநில கல்விப்பணிப்பாளர்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1977-12-08 7882

---


## முக்கிய வேண்டுகோள்

எமது வாடிக்கையாளர்கள்
மற்றும்
நண்பர்கள் அனைவருக்கும் ஓர் நற்செய்தி!

12-12-77 திங்கட்கிழமை தொடக்கம்
எமது ஸ்தாபனத்தில்

★ கிராங் றி கிறைன்டிங்
★ கிராங் றி (f)பில்லிங்
★ றி போறிங்

மூதலான வேலைகள் மேற்கொள்ளப்படும். மற்றும் யந்திர சம்பந்தமான சகல வேலைகளும், டீசல் பம்ப் வேலைகளும் குறித்த தவணையில் திறம்பட செய்து கொடுப்போம்.

ஆதரவு தருக,

# கீதா டீசல் என்ஜினியேர்ஸ்

338, ஸ்டான்லி வீதி,
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.
7863


# வரி விளம்பரம்

### தேவை

ரோறு மோட்டார் வாகன சேவிஸ் நிலையத்திற்கு சேவிஸ் நிலைய அனுபவமுள்ளவர்களும் சேவிஸ் நிலையத்தில் வேலைபழக விரும்புவோர்களும் 19-12- 77-க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். முகாமை இயக்குனர், த ரோறு லிமிட்டெட், 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7895

---

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ளவர்களும், வேலை பழகுபவர்களும் (Trainees) உடனடியாகத் தேவை. வேலை பழகுபவர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து நாளொன்றிற்கு ரூபா 6/- வரையில் சம்பளமாகக் கொடுக்கப்படும். நீர்வேலிக்கு கிட்டடியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 7790

---

அனுபவமிக்க வேத்வேலை, பிற்றிங் வேலை தெரிந்த வேலையாள் தேவை. நேரில் வரவும். இன்டஸ்றியல் வேக்ஸ், பருத்தித்துறை 7870

---

பிறஸ்ஸியர் தைப்பதற்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை. 31-12-77க்கு முன் விபரங்களுடன் விண்ணப்பிக்குக. விளம்பர இல 7886, மே/பா 'ஈழநாடு' லிமிட், யாழ்ப்பாணம். 7886

---

தென்னந்தோட்டத்தில் குடியிருந்துதொழில்செய்ய தொழிலாளர் தேவை. விண்ணப்பிக்கவும். சுப்பிரின்டன், தட்டுவான் கோட்டை,பளை. 7871

---

பளையில் தென்னந்தோட்டம் அல்லது தரிசு நிலம் 25 முதல் 50 ஏக்கர் காணி தேவை. விபரங்களுக்கு: 7,டச் வீதி. சாவகச்சேரி. 7872

---

கௌரவமான யாழ். இந்து வேளாள குடும்பப்பெற்றோர் லண்டனில் திறமைப் பட்டமும் பரிசும் பெற்றிருக்கும், குணம், நிறம், உயரம், அழகுமுள்ள 28 வயது மகனுக்கு- உயர் கல்வியும் (Doctor, Engineer, Accountant)குணம், திறம், உயரம், அழகுமுள்ள இதே இன மணப்பெண் தேடுகின்றனர். நியாயமானசீதனம் ரொக்கத்துடன் எதிர்பார்க்கப்படும். பிரிட்டிஷ் 'விசா' வுள்ள பெண்விரும்பத்தக்கது. (2) லக்ஷசம்ளவில்சீதனமுள்ள (வீடு, வயல், ரொக்கம்) இவருடைய அழகியஇளம்சகோதரிக்கும்(கணக்கியல்மாணவி.வேலை பார்க்கின்றார்). டாக்டர், அக்கவுண்டன், என்ஜினியர் தேவை. ஜாதகம் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். [விளம்பர இல. 7890, மேற்பார்த்து ஈழநாடு லிமிட்டெட், தபால் பெட்டி இல.49, யாழ்ப்பாணம் 7890

### விற்பனைக்கு

உடுவில் காங்கேசன்துறை வீதியிலும் அதற்கு அண்மையிலும் வீடுகளும், காணிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்! சட்டத்தரணி செல்வி அபிமன்னசிங்கம், உடுவில், A.G.A. கந்தோர் முன்னால். 7898

### விற்பனைக்கு

லம்பிரட்டா ஸ்கூட்டர் இத்தாலி 150 சி. சி. 5 கிறி. எஸ் எக்ஸ் மொடல். ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. 7897

---

"சில்க்கிறீன்" பெயின்ற் (நேயோன் கலர்) விற்பனைக்குண்டு. தபால்மூலமோ அல்லது நேரிலோ தொடர்புகொள்ளவும். கோ. அருணகிரிநாதன், 4. மணிக்கூட்டு ஒழுங்கை,யாழ்ப்பாணம். 7896

---

நல்ல நிலையிலுள்ள நஷனல் பனசோனிக் 3-IN-1 (Stereo) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கனியூட் அகஸ்ரீன், 7, விதானை வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். 7877

---

தொட்டிலடிச் சந்திக்கு அருகாமையில் சங்கானை வீதியில் வீடு கட்டுவதற்கேற்ற 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வ.ஸ்ரீரங்கன், சட்டத்தரணி, வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை. 7891

---

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடிக்கு அண்மையில் 52, கேசாவிற் பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் 2 1/2 பரப்பு காணியும், வீடும், கிணறு. சுற்றும்திலுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: P. குணராசா, தபால்பெட்டி இல. 4, ஜாஎல, தொலைபேசி: 265. 7885

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

## திருத்தம்

வழ/இல/ஈகு/13325
8-12-77-ல் பிரசுரமான மேற்படி காணி விற்பனை விளம்பரத்தில் தீர்வைத் தொகையின் கீழ் கோட்டுச்செலவு ரூ. 499/61 சதமும் என்றிருப்பதை ரூ. 780/11சதமும் இதில் ரூபா 12,500/- கழிக்கப்படும் என்று திருத்தி வாசிக்கவும்.

க. சரவணமுத்து
கொமிஷனர்,
விலைமதிப்பாளர்
38/1, சோமசுந்தரம்
அவன்யு,
யாழ்ப்பாணம். 7893

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

## திருத்தம்

வழ இல: MB/18919

18-11-77-ல் பிரசுரமான மேற்படி காணி விற்பனை 1977 ஆண்டு டிசம்பர் மாதம் 12-ந் திகதி (12-12-77) புதன் கிழமை என்றிருப்பதை திங்கட்கிழமை என்று வாசிக்கவும்.

க. சரவணமுத்து
கொமிஷனர்,
விலைமதிப்பாளர்,
38/1, சோமசுந்தரம்
அவன்யு,
யாழ்ப்பாணம். 7892

---


நம்பிக்கையான நவநாகரிக தங்க,வைர
நகைகள் வேண்டுமா?

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர. நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199. தந்தி: வைரம்


## Green Memorial Hospital Manipay

WANTED

Medical Officers, M.B.B.S, Trained Anaesthetist with experience for immediate employment.

Salary negotiable on our scale or contract for two years.

Apply to: Acting Medical Superintendent.
Green Memorial Hospital,
Manipay.
on or before 20-12-77. (7883)

# சாத்தான் வேதம் ஓதுகிறது!

காவலூர் ஞானேந்திரன்

இந்த பஸ் பிரயாணம் இருக்கிறதே...இதை விடச் சிரமமான காரியம் வேறு இருக்குமென எனக்குத் தோன்றவில்லை. 'எவரெஸ்டை' ஏறிய டென்ஸிங்கை எங்கள் பஸ்ஸில் ஏறவிட்டால் நிச்சயம் அவன் இந்த உண்மையை ஒப்புக்கொள்ளவே செய்வான். மடிப்புக்கலையாத உடையோடும், கலையாத தலையலங்காரத்தோடும், பஸ் வண்டியினுள் ஏறுபவன், யாழ்ப்பாணம் பஸ் ஸ்டான்டில் அடிபட்டு, நெரிபட்டு இறங்கும்போது காட்டும் கோலமிருக்கிறதே அது ஒரு தனி அழகுதான்;

வழமைபோல் பஸ்ஸிற்குள் ஏறி பகீரத பிரயத்தனப்பட்டு, ஒரு ஆசனமும் தேடிவிட்டேன். இது என்னைப் பொறுத்தமட்டில் ஓர் அபூர்வமான சாதனை. அலுவலக வேலை முடிந்து தெல்லிப்பளைக்குப் போகும் பஸ்ஸிற்காகக் காத்து நிற்கும் நீண்ட கியூவில் நானும் ஒருவனைக் கலந்துகொள்வேன். எப்பொழுது பார்த்தாலும் இங்கே ஜனத்தொகைக்குக் குறைச்சலிராது...இன்று என் அதிர்ஷ்டம், கியூவுக்கு வருவதற்கு இரண்டு நிமிடங்களுக்கு முன்பாக ஒரு பஸ், அங்கிருந்து புறப்பட்டுப் போயிருந்தது. அதனால் கியூவரிசையில் நான் முன்னே நிற்க முடிந்தது பஸ்ஸிலும் ஒரு ஆசனம் கிடைத்தது.

பனங்கிழங்கு, மூடைக்குள் அடுக்கப்படுவது போல கண்டக்டர் டிக்கற்றை கிழித்து, கிழித்து ஒவ்வொருவராக பஸ்ஸிற்குள் அடுக்கிக் கொண்டிருந்தார். உள்ளே வியர்த்துக்கொட்ட ஆரம்பித்துவிட்டது...போதாத குறைக்கு, மாலை வெய்யில் கன்னத்தில் பட்டு 'சுள்' என்று எரித்தது கையிலிருந்த பத்திரிகையை உயர்த்தி, இந்தச் சித்திரவதையிலிருந்து தப்ப முயன்று கொண்டிருந்தேன். வியர்வையால் ஷேர்ட் தெப்பமாக நனைந்துவிட்டது...பஸ் ஓடி, காற்று உடலில் பட்டால்தான், வியர்வை நிற்கும்...டிரைவரைத்தான் இன்னமும் காணேமே...

எல்லோரும் பொறுமைசாலிகளா? ஒரு சிலர், பொறுமையிழந்து தலைக்கு மேல் தொங்கிய நீளக் கயிற்றை இழுத்தார்கள்...

அடிக்கடி 'பெல்' சப்தித்ததால், கண்டக்டர் சீறினார்... 'யாரங்கே பெல் அடிக்கிறது? இப்படி அடிச்சியளோ, இப்படிய இருக்கவேண்டியது தான்.'

அவரது குரல் அதிகாரம் மிக்கதாகத் தொனித்தது.

'ஆபீஸ் நேரமல்லவா எப்பொழுதுமே இந்த நிலைமை தான்!'

'நீங்கள் எங்கே வேலைசெய்கிறீர்கள்'— என்று அவர் என்னைக் கேட்டார்.

'லேபர் டிப்பார்ட்மென்டில்' என்று பதில் கொடுத்தேன் நான்...

யாரோ பெல்லை அடித்தார்கள். பஸ் ஒரு குலுக்குடன் உறுமிக்கொண்டு நின்றது...

'கோயில் வாசல்', 'கோயில் வாசல்' இறக்கமிருக்கா'

அங்கே, அந்த நேரத்தில் அவர் தானே ராஜா?

நேரமாகி விட்டபோதும்... டிரைவர் தனது 'சீட்டில்' ஏறி உட்கார்ந்து, 'என்ஜினை' 'ஸ்டார்ட்' பண்ணி, 'கண்டக்டரின்' பெல் அடிப்பிற்காக பொறுத்திருந்தார் ... 'பெல்' அடிக்கப்பட்டது...பலர் நகரும் பஸ்ஸில் தாவி ஏறினார்கள்...

என் பக்கமாக மூச்சு இளைக்க ஒரு பருத்த பெண்மணி, பிரயாணிகளிடையே இடிபட்டுக் கொண்டிருப்பதைக் கண்டேன். பஸ் ஓடத் தொடங்கிவிட்டது. இனியாவது காற்று உடலில் படும் என்று நினைத்த எனக்கு, பக்கத்தில் நின்ற பெண்மணியின் கோலம், பார்க்கச் சகிக்கவில்லை, அபூர்வமாகக் கிடைத்த 'சீட்டை' துச்சமென மதித்து, எழுந்து, அந்தப் பெண்மணிக்காக விட்டுக் கொடுத்தேன். அவள் 'தாங்ஸ்' என்று கூறிவிட்டு உட்கார, இன்னொரு குரல் 'தாங்ஸ்' என இரண்டாவது தடவையாக நன்றி கூறியது. இந்தக் குரலுக்குரியவர் அந்தப் பெண்மணியினது கணவராக இருக்க வேண்டும்...

'இந்த 'றூட்' பஸ்ஸில் எப்பவுமே 'கிறவுட்' தான் என்றார் அவர்...

மேலேயுள்ள கம்பியில் பிடித்து, சுகமாக நிற்க முயன்றபடி, நானும் பதில் கொடுத்தேன்.

கண்டக்டர் பலமாகக் குரல் கொடுத்தார்...என்னை ஒருவர் இடித்துக்கொண்டு இறங்குவதற்காக பிரயாணிகளைத் தள்ளிக்கொண்டுபோனார்...

'ஐயோ என்ரை காலடா தம்பி... சப்பாத்துக் காலால உளக்காதடா மோனே' என்று ஒரு கிழவி முறையிட்டாள்...

அவன் இறங்கியதும் இறங்காததுமாக கண்டக்டர் பெல் அடிக்க பஸ் மீண்டும் உறுமிக்கொண்டு புறப்பட்டது.

என்னுடைய நண்பர் பேச்சை வளர்த்தார்...

'உங்கள் சொந்த இடம்'...

'கட்டுவன்...'

'டெயிலி பஸ்ஸில்தான் வாறனீங்களோ? ஏன் ரயிலில வந்தால் சுகமாயிருக்குமே...'

'ஸ்டேசன் ரெம்பத் தூரம் பாருங்கோ; அதனால் நான் பஸ்ஸிலேயே வந்துவிடுவதுண்டு'

அவர் முகத்தில் கவலை தெரிந்தது.

'அட அப்படியா...உங்களுக்கு பிள்ளைகள் இல்லையா?'

'ஒரு பெண்ணிருக்கிறுள்... படிப்பை முடித்துவிட்டு வீட்டிலிருக்கிறுள்...வேலை செய்ய அவளுக்கு ஆசை...எனக்கோ இஷ்டமில்லை...'

அவர் என் கருத்தை ஆமோதித்தார்.

'சரியாய்ச் சொன்னீங்க... இந்தப் பெட்டையள் வேலைக்கு எதுக்குப் போகவேணும்? பொடியளின்ரை சான்சையும் பழுதாக்குதுகள்! காலாகாலத்திற்கு கல்யாணஞ் செய்து கொடுக்காததால் வருகிற வினைதான் இதெல்லாம்...'

'நீங்க சொல்கிறது சரியாய் இருக்கலாம். ஆனால் இந்தக் காலத்தில் பெண்கள் உத்தியோகம் தேடாவிட்டால் மாப்பிள்ளை தேடுவதுமல்லவா சிரமம்? உத்தியோகம் செய்யாதபெண்ணென்றால், சீதனம் நிறையக் கேட்கிறார்களே... இதற்கு என்ன சொல்லப் போகிறீர்கள்...?

என் கேள்விக்கு அவர் பதில் சொல்வதற்கு முன்பாக. திடீரென பஸ் போட்ட பிரேக்கால் அவர் என்மீது சரிந்து விழுந்தார்...அவர் தலை என் முகத்தில் இடித்தது ... பல் உடையாத குறை. அவருக்கும் பிடரி வலித்திருக்கவேண்டும். தலையைத் தடவிவிட்டுக் கொண்டார்...பல பிரயாணிகள் சாபம் கொடுத்தார்கள்.

''நாசமாய்ப்போன டிரைவர்.. இப்படியும் பிரேக் போடுறதா?''

கார் ஒன்றை விலக்கிக் கொண்டு பஸ் மீண்டும் பாதையில் விரைந்தது.

''சிலதுகளுக்கு பஸ் சரியா ஓட்டத்தெரியாது'' என்று முணுமுணுத்த என் நண்பர், எனது கேள்விக்குப் பதில் தந்தார்.

''நீங்க சொல்லுறது ரொம்பக் கரெக்ட் மிஸ்டர்... அட உங்க பெயரைக் கேட்கவில்லையே... என் பெயர் நடராஜா...''

எனது பெயரை 'சுப்பிரமணியம்' என்று கூறிவைத்தேன்.

''மிஸ்டர் மணியம்...இந்தச் சீதனம் கேட்கிறவர்களை ஜெயிலில் போடவேண்டும் பாருங்கோ...எவ்வளவு அநியாயம். டொனேஷனும், மண்ணுங்கட்டியாம். கார்கொடுக்க வேணுமாம் ... விடுவளவு போதா குறைக்கு! அநியாயப் படுவாங்கள் ஏன்தான் இப்படிக் கேட்கிறாங்கள். சீ... சீ... இந்தச் சீதனம் ஒழிஞ்சா, எத்தனை குமருகள் நம்மிட நாட்டில் கரையேறும். ஏன் மிஸ்டர் மணியம் இதுக்கு ஒரு சட்டம் பாஸ் பண்ணக் கூடாதோ?''



நான் பதில் கொடுப்பதற்கு முன்பாக பஸ், மருதனுமடம் சந்தியில் சட்டென நின்றது. பள்ளிப்பிள்ளைகள் நிறைய ஏறினார்கள். பஸ் வாசலில் நின்று கண்டக்டர்தொண்டை இழியக் கத்தினார் ...

''உள்ளுக்குப் போங்கோவன்...மற்றவங்களும் போக வேணுமோ?''

பஸ்ஸிலிருந்த நெருக்கம் போதாது என்று, பத்துக்கு மேற்பட்ட பள்ளிப்பிள்ளைகளை உள்ளுக்குள் ஏற்றி, நெருக்கடியை மேலும் அதிகரித்து வைத்தார் பஸ் கண்டக்டர்.

பஸ் மீண்டும் புறப்பட எங்கள் கதையும் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தது.

''உங்களுக்குப் பிள்ளைகள் இல்லையா?'' இது எனது கேள்வி. அவருடைய கொள்கை எனக்குப் பிடித்திருந்தது. சீதனம் வாங்குவதை அடியோடு விரும்பாமல், அதற்கு எதிர்ப்புக் கிளப்பும் 'அப்பாமார்' பலர் இருந்தால் பெண்ணைப் பெற்றவர்கள் ஏன் தலையில் கைவைக்கவேண்டும்?

''ஒரு பிள்ளை இருக்கிறன் மிஸ்டர் மணியம்! இன்லான்ட் றெவின்யூ டிப்பார்ட்மென்டில் வேலை! நிறையச் சீதனம் தாறன் எண்டு கல்யாணம் பேசி பலதுகள் வருகுதுதான். இன்னமும் ஒண்டுக்கும் ஓமெண்டு சொல்லவில்லை.

எனக்குள் ஒரு சபதம் தட்டியது.

''மிஸ்டர் நடராஜா... 'டோன்ட் மிஸ் அன்டர்ஸ்ராண்ட் மீ!' என் பெண்ணுக்கு உங்கள் மகனை...''

மேலே எப்படிச் சொல்லுவது என்று தெரியாமல் தயங்கினேன். எனது பேச்சைக் கேட்டாரோ இல்லையோ தெரியவில்லை...அவசரம் அவசரமாக பெல் அடிக்கும் கயிற்றைப் பிடித்து இழுத்தார் எனது நண்பர்.

''பார்த்தீங்களா மிஸ்டர் மணியம்...கதை ருசியில் இறங்கிற இடத்தைக்கூட மறந்து போய்விட்டன்...அப்ப நான் வரட்டே... நான் சுன்னாகத்தில் இறங்கவேணும்.''

பஸ் நின்றதும் நில்லாததுமாக தன் மனைவியையும் இழுத்துக்கொண்டு அவர் பஸ்ஸிலிருந்து இறங்கினார்.

காலியாவிட்ட எனதுபழைய ஆசனத்தில் சட்டென்று உட்கார்ந்தேன்..

''இதென்ன மனிதர்களோ? இவ்வளவுநேரமும் எதைஎதையோவெல்லாம் பேசிவிட்டு என் மகளை உன் மகன் கட்டுவானு' என்று கேட்டபோது, அவசரமாக இறங்கிச்செல்லும் இந்தவகை மனிதர்களைத் தானு வேதம் ஓதும் சாத்தான்கள் என்கிறார்கள்?''

இந்தக் கேள்வியை என்னிடமே கேட்டு அதில் ஒரு பதிலைப் பெற முயன்றேன்... பஸ் றோட்டில் ஒரு பள்ளத்தில் விழுந்து ஏறியபடி ஓடிக்கொண்டிருந்தது...

(யாவும் கற்பனை)


நீங்கள் மிளகாய் பயிர் செய்கிறீர்களா?

களை, பூச்சி, பங்கசுகளிலிருந்து உங்கள் பயிரைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்

- விதைகளை யூனிஸோல் 1.5D தூளுடன் கலக்கவும்
- நாற்று மேடைக்கு "பிராஸிக்கோல் 20 D" பவுடரைத் தூவவும்
- "லஸ்ஸோ" பாவித்துக் களைகளை அழிக்கவும்
- "செவின்" பாவித்துத் தீங்கிழைப்பான்களை அழிக்கவும்

அபரிமிதமான விளைச்சலைப் பெற

'மக்லூட்ஸ்' தரும் வழி இதுவே.

உங்கள் தேவைகட்கு:-

எஸ்.பி. சாமி அன் கோ

மக்லூட்ஸ் விவசாய இரசாயண விநியோகஸ்தர்கள்

193, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்


ஞானத்தமிழ்—32

# ஞானமும்—அருளும்

வ. குகசர்மா

எங்கே ஞானம் உண்டோ அங்கே அருளும், அன்பும் உண்டு பண்டைய அரசர்கள் இறைவழிபாடு உடையவர்களாகவும், அறிவு மிக்கவர்களாகவும் இருந்தார்கள். எனவே அவர்களின் ஆட்சியில் பகையில்லை. இயல்பாகப் பகையுள்ள மிருகம், பறவைகள் கூட பகை நீங்கி வாழ்ந்தன. ''மாதர் அருகூட்டும் பைங்கிளியும், ஆடற் பருந்தும் ஒரு கூட்டில் வாழ'' நளமகாராசன் உலகத்தை ஆண்டான் எனக் காண்கிறோம். பாண்டியரின் செங்கோல் முறையைக் கூற வந்த சிலப்பதிகாரம்,

''அரவுஞ் சூரும் இரைதேர் முதலையும்
உருமுஞ் சார்ந்தவர்க்
குறுகண் செய்யா
செங்கோற் தென்னவர்
காக்கும் நாடு''

என்று கூறுகிறது.

பண்டைய அரசர்கள் பற்றற்றான் பற்றன்றி வேறு எவ்வகைக் கொள்கையும் கொள்ளாமையும், உலகமும் எல்லா உயிர்களும் ஆண்டவன் அடிமையே என்னும் உணர்வுள்ளவர்கள்.

இதுபோலவே, ஆனயநாயனார் எனப் பெயரிய ஆயர் குலத்து அடியார், ஒருநாள் வேய்ங்குழல் வாசித்தார். அவரின் வேய்ங்குழலோசை இறைவனிடத்தில் பொருந்திய மிக்க அன்பின் காரணமாக எழுந்த ஓசை. அதனால் அது ஞான ஓசை அந்த ஓசையைக்கேட்ட எல்லா உயிர்களும் ஞானம் என்கின்ற ஒரே உணர்ச்சியை அடைந்தன அதனால் அவர்களிடத்தில் நலிவாரும் இல்லை, மெலிவாரும் இல்லை. இதனால் மயிலின் மீது சர்ப்பம் புரண்டு விழும். யானையும் சிங்கமும் ஒருமித்து வரும் சிறு மிருகங்கள் தமது பகையாகிய புலிகளின் பக்கத்தே அச்சமில்லாமல் வரும் இதனைச் சேக்கிழார் பின்வரும் செய்யுளிலே இனிமை பொருந்த எடுத்துக் காட்டுகிறார்.

''நலிவாரு மெலிவாரு உணர்வொன்றாய் நயத்தலினால்

(7ம் பக்கம் பார்க்க)

## படிக்கலாம்- சுவைக்கலாம்

இரு இடியப்பங்களைத் திருடிவிட்டாளாம் ஒரு வீட்டு வேலைக்காரச் சிறுமி. விளக்குமாற்றடி சக வேலை நீக்கம். அந்த வீட்டு எஜமானர் அரசாங்கச் சொத்தைத் திருடிய குற்றத்துக்காக இது நடந்த இருநாட்களில் விலக்கப்பட்டாராம். அது பசிக்கு, இது மேலதிகச் செலவுக்கு.

●

கதைகளில் சிருஷ்டிக்கப்படும் பெண் பாத்திரங்களெல்லாம் அடுப்படி, படுக்கை அறைப்பாத்திரங்களாகச் சிருஷ்டிக்காது வீர, தீரத் திறன் வாய்ந்த பாத்திரங்களாக சிருஷ்டிக்கப்பட்டால்தான் பெண்கள் முன்னேற்றம் மேலும் துரிதமடையும் என்ற கருத்து மேல் நாடுகளில் இப்போது வலுவடைந்துவருகிறது.

●

சிலர் புகழுக்காக ஆவது சில நல்ல விஷயங்களைச் செய்து விடுகிறார்கள். சிலர் எதற்காகவுமே நல்ல விஷயங்களைச் செய்வதில்லை.

●

தேநீர்க் கடையொன்றில் தேநீர் விலை இன்னமும் 65 சதம். ஏன் என்று கேட்டேன். மேலே பாருங்கோ என்றார் சர்வர். மேலே காற்றாடி வேகமாகச் சுழன்றுகொண்டிருந்தது. மின்சாரத்துக்கான கட்டணம் இன்னமும் குறையவில்லை என்பதே இதன் பதிலாக இருக்கலாம்.

●

ஒரு சர்வர் சாப்பாட்டுக் கடையின் விலை கூடிப்போய் விட்டது, எழுதுங்கோ என்றார். மற்றவர் இந்தக் காய் பிஞ்சுக்காரரர் ஏன் இவ்வளவு விலை கூட்டி விற்கிறார், எழுதுங்கோ என்றார். இருவரும் தங்களுக்குள் விலை கூடிப்போன விஷயங்கள் பற்றிப் பேசிக்கொள்ளாதவர்கள்.

●

அன்று றேடியோ பலமாகப் பாடிக்கொண்டிருந்தது. ஏதோ தலையிடி. குறைத்தேன் சத்தத்தை. குறைத்ததும் ஒரு பாட்டுப்போட்டார்கள். அப்போது பாடிய பாட்டு, 'நான் சத்தம் போட்டுத்தான் பாடுவேன்.'

●

யாழ்ப்பாணத்தில் பெய்த பெருமழை நீரைச்சேகரித்து வைத்திருந்தால் நமது வரண்ட பிரதேசத்துக்கு எவ்வளவு உதவியாக இருந்திருக்கும். நீர்ப்பாசனத் துறையில் வேலை செய்பவரைக் கேட்டேன். 'அதற்கு வடிகால்களெல்லாம் கட்ட வேண்டும் செலவு...' இழுத்தார். மகாவலி திருப்புபவர்கள் இதுபற்றியும் சிந்தித்தால்......

[இங்கு வீதிகளில் எவ்வளவு கலன் நீர் தேங்கி நின்று வீணாகியது!]

●

தியாகம் என்று பல இளைஞர்கள் தெருவில் நிற்கிறார்கள், சில தமிழ் முதலாளிகள் தமிழ் எம். பிக்கள் வீட்டில் பெர்மிட்டுக்களுக்காக நிற்கிறார்கள். இளைஞர்களும் ஏதேனும் தொழில் செய்ய முற்படவேண்டும் என்பதற்காக சொல்ல நினைத்தேன்,

●

தரப்படுத்தல் முறைநாலு வருடங்கள் அமுலில் இருந்தது. இதற்குள் பாதிக்கப்பட்டோருக்கு ஏதேனும் நிவாரணம் தேட முடியுமா? பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவரின் கேள்வி இது.

●

ரேகன் விடுதலையான உடன் தமிழர் உரிமைபற்றி நிறையப் பேசினார். இப்போது அப்படி ஒன்றையும் காணோமே, ஒரு வேளை தனிச்

சிங்களப் பகுதியில் போட்டியிடுவது பற்றி யோசிக்கிறாரோ. கிறைவேறு, அரசியல்வேறு. சமஉரிமை பேசிய எட்மண்ட் சமரக்கொடியின் பேச்சையே இப்போது காணோமே.

●

இப்போது ஆண்கள் கழுத்தில் சால்வை போடும் வழக்கம் சிறிது குறைந்து வருகிறது, ஆனால் பெண்கள் இப்போது சால்வை போடும் பழக்கத்தை பெரிதும் ஆர்வத்தோடு பின்பற்றி வருகின்றார்கள் போல் தெரிகிறது. ஆண்களில் சிலர் தாலிக்கொடிகளுக்குஆசைப் படுவதாலேயே இந்த நிலை மாற்றமாக இருக்கலாம்,

●

''சிதைந்த கனவின் துணுக்குகளைத் தழுவிக்கொண்டு சோர்ந்து கிடப்பதற்காகவே மனிதன் பிறக்கவில்லை, வெறுமே ''கடந்த காலம்'' என்ற இரும்புச் சங்கிலி கொண்டு மனத்தைக் கட்டி வைக்க முடியாது. ''வருங்காலம்'' என்ற கருடச் சிறகும் மனத்துக்குப் பெருவரமாகக் கிடைத்திருக்கிறது, கனவு ஒன்று காண்பது; அதை மலர்விப்பது; நடைமுறையில் அதை உண்மையாகக் கொண்டு வரப் பாடுபடுவது; அப்படிப் படுகிறபாட்டில் ஆனந்தக் கொள்ளை கொள்வது; இந்த நிலையில் துரதிருஷ்டவசமாக அந்தக் கனவு சிதைந்து அழிந்தாலும் சிறிதும் சோர்வுறாமல், அதன் துண்டுகளின்மீது, இரத்தம் தோய்ந்த காலால் நடந்து வேறொரு கனவை நோக்கி ஓடுவது; இதுதான் மனிதனின் மனப்பண்பு. வாழ்வுக்குப் பயன் உண்டு என்கிறோமே, அதுஇதனால்தான்''

...வி, ஸ, காண்டேகர்

—க. கணேசலிங்கம்

# கலாயோகியின் வாழ்க்கையும் பணிகளும் -9

# அமெரிக்காவில் கலைப்பணியும் தத்துவ ஆராய்ச்சியும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ச. அம்பிகைபாகன்

கலாயோகி இந்துசமய, பௌத்த நூல்களைப் படித்தது போல் மறு சமய நூல்களையும், சிறப்பாக அநுபூதிமான்களின் நூல்களை படித்துள்ளார். கிரேக்க தத்துவ ஞானிகளான பிளாட்டோ, அரிஸ்டோட்டில் முதலியவர்களின் நூல்களை கிரேக்கமொழியிலும், புளோற்றினசுடையதும் (Plotinus), அவர் வழிவந்த ரோமன் கத்தோலிக்க அநுபூதிமான்களின் நூல்களை லத்தீன்மொழியிலும், எக்காட் (Meister Eckhasrt) என்பவரின் நூல்களை ஜெர்மன் மொழியிலும், அவரின் சமகாலத்தவரும் நண்பருமான ஹெரேன் (Gueron) நூல்களை பிரெஞ்சு மொழியிலும், றூமி (Rumi) என்னும் சூபியின் நூல்களை அரபு மொழியிலும் படித்தார்.

இவர் பல்வேறு நூல்களைப் படித்தது பற்றியும் அவற்றைப் பயன்படுத்திய முறைபற்றியும் ஐ. பி. ஹோணர் (I. P. Horner) என்னும் அறிஞர் கூறியிருப்பது பின்வருமாறு: ''ஆனந்த குமாரசுவாமி அவர்களை அதிமேதை அல்லது வித்தகர் என்றழைப்பது பொருத்தமாயிருக்கும். அவர் தனது அபார மூளையின் சக்தியை மெய்ப்பொருள் காண்பதில் செலுத்தினார். அதுவே அவரின் வாழ்க்கை இலட்சியமாகவிருந்தது. அவர் தனது அயராத உழைப்பையும், பல நூல் கல்வியையும், பயிற்றப்பட்ட மூளையின் ஆற்றலையும் இந்த நோக்கத்துக்கே பயன்படுத்தினார். அவர் தானறிந்த விஷயங்களை தேவைக்கேற்றபடி பிரித்தும் ஒன்று சேர்த்தும் பார்க்கப் பழகியுமிருந்தார். அவர் பல விஷயங்களையும் பல நூல்களையும் படித்தபோதிலும், அவர் மனதில் குழப்பத்துக்கிடமேயில்லை. எல்லாவற்றையும் சீர்படுத்திவைத்திருந்தார். இதனால் அவர் ஒரு நடமாடும் கலைக்களஞ்சியமாக விளங்கினார். அவரைப்போல் பல்துறைகளிலும் பாண்டித்தியம்பெற்றவரைக் காணமுடியாது.

அவர் தமது அறிவை பல துறைகளிலுமிருந்து பெற்றுக்கொண்டார். இதற்கு அவருடைய பலமொழிப் பயிற்சி உதவியாயிருந்தது. இதனால் அவர் மொழிபெயர்ப்பாளரை நம்பி இருக்கவேண்டியநிலைமையேற்படவில்லை. தேவைப்படும் போது தாமே மொழிபெயர்த்துக்கொள்வார். அவரின் மொழிபெயர்ப்புக்களின் அழகுதான் என்னே! அவர் ஒரு பந்தியை மொழிபெயர்த்தாலென்ன அல்லது ஒரு சொல்லை மொழிபெயர்த்தாலென்ன அது மிகவும் பொருத்தமாயிருக்கும். இதனால் அவர் ஒரு நூலையேனும் முழுதாக மொழிபெயர்க்கவில்லையென்ற குறையிருந்துதான்திரும்.

அவர் சம்பந்தப்பட்ட விஷயங்களில் எந்தக் கேள்வியைக் கேட்டாலும் அதற்குப்பொருத்தமான, அவர்ச்சிகரமான விடை கிடைக்காமல்போகாது. நாம் கேட்கும்கேள்விகளை உயர்நிலையில்வைத்துமறுமொழி கொடுப்பார்.

இப்பொழுது இந்தியாவில் சமயத்துறையில் ஹரே கிருஷ்ண, ஆழ்ந்த தியானம் போன்ற பல புதிய இயக்கங்கள் காணப்படுகின்றன. ஆனால் கலாயோகி சமயம்பற்றி பல நூல்களைப் படித்தும் பலவாறு சிந்தித்திருந்தும், ஒரு புதிய சித்தாந்தத்தை ஏற்படுத்தமுடியவில்லை. அவர் இதுவிஷயமாகக் கூறியிருப்பது பின்வருமாறு:

''கலைத்துறையிலோ, சமயத்துறையிலோ சொல்லவேண்டியதெல்லாம் சொல்லியாய் விட்டது. புதுக்கச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நமது கடமை சொல்லப்பட்டவற்றை சிந்தித்து, தெளிந்து அதன்படி வாழ்வதே.'' இதுபோன்ற கருத்துடையவர்களை பாரம்பரிய வாதிகள் (Traditionalists) என்பர். இவர்களில் கலாயோகிக்கும், பிரெஞ்சு அறிஞர் ஹெரேன் (Gueron) என்பவருக்கும் முக்கிய இடமுண்டு. சேர் இராமநாதன் ஹிபேட் ஜேனல் (Hibbert Journal) என்னும் சஞ்சிகையில் எழுதிய கட்டுரையொன்றில் மேனாட்டு விஞ்ஞானத்தை அறியாமை பாற்பட்ட அறிவு (Western Secience is ignorant knowledge) எனக்கூறியுள்ளார். இதற்கு ஹெரேன் தனது ''மேற்கும் கிழக்கும்'' (East and West) என்னும் நூலில் சிறந்த விளக்கம் கொடுத்துள்ளார். ''விஞ்ஞான பஞ்சபூதங்களின் செயல்களை விளக்குவதால் ஒருவனை அறிவு ஏற்படுகிறது. ஆனால் ஆத்மிக விஷயங்களைப் பற்றி அது ஒன்றும் கூறுதபடியால், அது அறியாமை பாற்பட்ட அறிவாகும்.''

இந்துக்கள் காலதேச வர்த்தமானத்தைக் கடந்த உண்மைகளை சனாதன தர்மமென்றனர். இச் சனாதன தர்மத்தை ஆங்கிலத்தில் 'பெரினியல் பிலோசபி' (Perennial Phi o-sophy) என்பர். இதை ஆராய்ந்தவர்கள் பல நாட்டு பல சமய ஞானிகளின் வாழ்க்கை கூறியுள்ள அனுபவங்களிலும் ஓர் ஒற்றுமையைக் காண்கின்றனர். இதுபற்றி கலாயோகி பல சமயங்கள் ஒரு பாஷையின் பல்வேறு பிரதேச வழக்குகள் (Dialects of a language) போன்றவையென்றும் ஒரே சிகரத்துக்கு இட்டுச்செல்லும் பல்வேறு வழிகளென்றும் (Different paths leading to the same summit) கூறியுள்ளார்.

ஆங்கிலத்தில் சிறந்த நாவலாசிரியரும் சமயத்துறையில் பல ஆராய்ச்சிகள் செய்தவருமான அல்டஸ் ஹக்கிலி (Aldous Huxley) 'பெரினியல் பிலோசபி' என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இந்நூலில் பல தலைப்புக்களில் பல நாட்டு ஞானிகள் அநுபூதிமான்களின் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். வித்தோல்பெரி (Whittal A. perry) என்பவர் ஆயிரம் பக்கங்கள் வரை கொண்ட இன்னொரு நூலை (Treasnry of Traditional Wisdom) வெளியிட்டுள்ளார். ஆனால் இந்நூல்களில் தமிழ் நாட்டு அநுபூதிமான்களின் கருத்துக்கள்இடம்பெறவில்லை. பொருத்தமான கருத்துக்கள் இல்லாமலில்லை. அப்படியிருந்தும் அவை இடம்பெருமைக்குக் காரணம் இவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படாமையாகும். சில நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டிருந்தாலும் அவை கிடைப்பது அரிதாய்விட்டது. சேர் பொன்னம்பலம் அருணாசலம் திருவாசகம், தாயுமானவர் பாடல்கள் முதலிய நூல்களிலிருந்து சில பகுதிகளையும், திருமுருகாற்றுப்படையையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். கலாயோகி இந்நூலை தமது நூலொன்றில் மேற்கோளாகக் காட்டியுள்ளார். சேர் பொன்னம்பலம் இராமநாதன் அமெரிக்காவில் செய்த பிரசங்கங்களின் சாரமாக விளங்குகிறது, ''மேல்நாட்டு மக்களின் ஆத்மீகவாழ்வு'' (Culture of the soul among the western Nations) என்னும் நூலில் சைவசித்தாந்த உண்மைகளை திருவாசகம், தாயுமானவர் பாடல் முதலியவற்றிலிருந்து மேற்கோள்காட்டி தித்திக்கும் ஆங்கிலத்தில்விளக்கியுள்ளார். இந்நூல்கள் இப்பொழுது கிடைப்பது அரிதாய்விட்டது. இவற்றை மறுபிரசுரம் செய்ய வேண்டியதவசியமாகும். புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் இராமநாதன் தர்மத்தை பரிபாலிக்கும் சபையினர் இம்முக்கிய பணியைச் செய்வார்களென எதிர்பார்க்கிறோம்.

மேற்கூறப்பட்ட தொகுப்பு நூல்களில் இடம்பெறத்தக்க கருத்துகள் தமிழிலில்லாமலில்லையென்று கூறினோமல்லவா. உண்டென்பதற்கு ஒரு சிறு உதாரணம் காட்டுவோம். நிறத்தாலும்சமயத்தாலும்பிளவுபட்டுக்கிடக்கும் இக்கால உலகுக்கு வழிகாட்ட 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் திருமூலர் வாக்கைப் போல் வேறொன்றையும் காணமுடியாது. ஒரு பெரும் இலட்சியத்தை நான்கே நான்கு வார்த்தைகளில் சொல்லிவைத்த திருமூலர் பெருமையை என்னென்று எடுத்துரைப்பது. தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக் கூட்டமொன்றில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் வார்த்தைகளை ஐக்கிய நாடுகளின் சபையின்கட்டிடத்தில் முன் வாயிலில் எழுதப்படவேண்டும் என்று கூறினேன். அவற்றை ஒரு பக்கத்திலும் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் மந்திரத்தை மறுபக்கத்திலும் எழுதுவது பொருத்தமாகும்.

அடுத்த கட்டுரையில் வித்தரான கலாயோகி புகழ் உடம்பு எய்தியதைக் கவனிப்போம்.


## மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீகத்தில் புகழ்பெற்று விளங்கும் யாராலும் மறக்க முடியாத புதுமைப் பெயர்

## ''நீலன் கந்தசாமி''



பணம் அனுப்ப வேண்டாம், கைகூடிய பின் கட்டும் இலவச விபரங்களை எழுதிப்பெறவும்.

வசியம்! வசியம்!!

எதிர்பார்த்த இளைஞர்கள், யுவதிகள் எவ்வளவு தொல்லைகள் இருப்பினும் 3 நாட்களில் வசியமாக்கித் தருவேன். போனவரை திரும்ப எடுப்பித்துத் தருவேன். இருவரின் பெயர் விபரங்களுடன் எழுதவும்.

● தொழில்கிட்ட, விவாகங்கள் கெதியில் கைகூட,
● பரீட்சையில் சித்தியுற,
● சுவீப் அதிர்ஷ்டம்பெற,
● கண்திருஷ்டி, நாதிருஷ்டி,
● கிரகதோஷங்கள் நீங்க, வழக்கில் வெற்றிபெற, மருந்தால் சுகப்படுத்த முடியாத நோய்களுக்கு ஒரு கை வெற்றிலையில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதை எமக்கு அனுப்பி எமது விபரங்களைப் பெறவும்.

நீலன் கந்தசாமி,
21, மீமவத்தகும்புர ரோட் — மாத்தளை
MATALE.

## ஈழத்து இப்போதைய கவிஞர் வரிசை

# கவிஞர் கந்தவனத்தின் கவின்மிகு கவிதைகள்

**(இலக்கியமே பேச்சும் மூச்சுமாக வாழ்ந்த இரசிகமணி கனக செந்திநாதன் இவ்வுலக வாழ்வை நீக்குமுன் சமீபகால ஈழத்துக் கவிஞர்கள்பற்றிய கட்டுரைத் தொடர் ஒன்றை எழுதத் தொடங்கினார். இதுவே அவரது கடைசிப் படைப்பாகும். இக்கட்டுரையின் முன்பகுதி சென்றவாரம் வெளிவந்தது இது இரண்டாவது பகுதி. ஆ-ர்)**

'கம்பன் கவி; கவிகளுக்குக் கவியரசன்; கவியரசர்களுள் சக்கரவர்த்தி; கவிச் சக்ரவர்த்திகளும் தலைவணங்கும் கவிதைக்கடவுள்-எந்த அடைமொழியால் எப்படி அழைத்தாலும் அவன் யாவற்றையும் தாண்டி அப்பால் நிற்கிறான்' என்கிறார் பிரபல கவிஞராகிய ச. து. சுப்பிரமணிய யோகியார்.

'உலக மகாகவிகள் என்று யாவரும் தயங்காமல் ஒப்புக்கொள்ளக்கூடியவர்கள்மிகமிக சிலரே - கம்பன், வான்மீகன், வியாஸன், பெர்தூசி, ஹோமர், வெர்ஜில், கிதே, டாண்டே, மில்டன், சேக்ஸ்பியர் முதலியோர். இவர்கள் எல்லோரையும் ரசனைச் சுவையில், காவியக் கோப்பில் கம்பன் வென்றுவிட்டான்' - இது வ. வே. சு. ஐயரின் அபிப்பிராயம்.

இப்படிப்பட்ட கம்பனைப் பற்றி மகாகவி பாரதியார் முதல் இக்காலத்திலிருக்கும் சாதாரண கவிஞர்கள்வரை பாடியிருக்கிறார்கள். அவனுடைய மேதாவிலாசத்தைப் பற்றிப் பல அறிஞர்கள் பல கோணங்களில் ஆராய்ந்திருக்கிறார்கள். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோக்கிற் செல்வதை நுண்ணிதாக வாசிப்போர் உணர்வர். உதாரணமாக வ. வே. சு. ஐயர், ச. து. சுப்பிரமணிய யோகியார், வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், இரசிகமணி டி. கே. சி., பி. ஸ்ரீ., என்ற தமிழ் நாட்டு எழுத்தாளர்களும் பண்டிதமணி சி.க., செந்தமிழ்மணி பொ. கி., புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, வித்துவான் வேந்தனார் ஆகிய ஈழத்து அறிஞர்களும் கம்பரைப் பல கோணங்களில் அணுகியிருக்கின்றார்கள்.

'பாலின் சுவைக்கடல் உண்டெழுந்த கம்பன் பாரிற் பொழிந்து தீம்பாற்கடல்' எழுத்தாளர்களைக் கவர்ந்தது போல வேறு எந்த நூலும் கவர்ந்ததில்லை. அந்த ரசனையில் ஈடுபட்டுப் பலர் கவிதைகளாலேயே கம்பனுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர். கம்பன் பிள்ளைத்தமிழ் முதல் பல நூல்கள் அவனது பெருமையை தமிழ்நாட்டில் விளக்க எழுந்துள்ளன. ஈழத்தில் அவனது பெருமையை மேடைகளிலும் கருத்தரங்கங்களிலும், பட்டிமன்றங்களிலும் பேசிய கந்தவனம் அவர்கள் கவிதைகளிலும் அஞ்சலிசெலுத்த முன்வந்துள்ளனர். இப்படித் தனி நூலாக அஞ்சலி செலுத்திய பெருமை அவருடைய நூலாகிய 'கீரிமலையினிலே' என்ற நூலுக்குண்டு.

'கீரிமலையினிலே' என்ற தலைப்புக்கும் பளிங்கனைய கவிக்கரசன் கம்பனெனும் தேவனுக்கும் சம்பந்தமென்ன? 'வேற்றுமுகமும், வினைமுகமும் தோயுனர்க்கு மாற்று நகுலமலை வான்புனலில்' - கீரிமலையில் கவிஞர் கண்ட கற்பனைக் கனவிலேதான் கம்பர்பெருமான் வந்தார். கவிஞரோடு சம்பாஷித்தார். சாதாரண மனிதர்களின் மனத்திரையில் தோன்றுவதிலும் பார்க்கக கவிஞர்களது மனத்திரையில் இப்படியான கற்பனை ஓவியங்கள் தோன்றுவது இரசிகருக்கும் பயனுடையதாக இருக்கும். மன்னும் - புதுச்சேரி மாபெரிய சோலையினிடையே மகாகவி பாரதியாருக்குத் தோன்றிய குயில் எத்தனையோ விதங்களில் இலக்கிய உலகத்தின் நெஞ்சை அள்ளியுள்ளது. அதைநினைவுபடுத்திக்கொண்டு கீரிமலையினிலே என்ற இக் காவிய நூலைப் படித்துப் பாருங்கள்.

புன்மாலை அந்திப்பொழுது மெல்லெனக் கரைய அந்தி வானம் இலக்கிறது. மேகக் கூட்டங்கள் அங்குமிங்கும் அசைவதுபோலக் கண்ணில் படுகிறது. வானத்திலே இருப்பிடம் நோக்கிச் செல்லும் பறவைகளின் ரீங்காரத்தொனி கேட்கிறது. கவிஞர் கற்பனையில் மூழ்கின்றார். மேலே தெரியும் வானம் என்னென்னவோ நினைவுகளை அவருக்கு எழுப்புகின்றது. கவிஞர் பழைய புலவர்களுடைய அந்திவான் காட்சிகளையெல்லாம் படித்தவர்தான். பாரதியாரின் 'கா என்று கத்திடும் காக்கை' என்பதுகூட அவருக்குத் தெரியும். ஆனாலும் அவர் ஈழநாட்டுக் கவி; எங்கள் நாட்டுக்கவி. இன்னும் சொல்லப்போனால் அவர் கிராமத்தில் பிறந்து வளர்ந்த கவி. அதனால் மற்றவர்கள் கனவிலும் நினைத்துப் பார்க்கமுடியாத உவமைகளை அள்ளிச் சொரிகிறார். இதோ மூன்று பாடல்கள்:-

பொன்னிற நெற்றியிலே-
குங்குமப்
பொட்டினை வைத்து விட்டுப்
பின்னர் அழித்தது மேன்-
:பாவமிப்
பெண்ணென
எண்ணிடவாய்;

சாவகச் சேரிமண்ணை-
மேற்கினைச்
சார்ந்த செம்பாட்டு
மண்ணைத்
தூவிய தோகொணர்ந்து-
வரிசையிற்
சோழக மென்பது வாய்.

நீலப்பட் டாடையிலே-
பழுத்தப
லாலித்தக் காளியெல்
லாம்
சாலப் பிசைந்தெறிந்தார்-
யாரெனத்
தானையம் மேலெழவாய்,

மாலைமகள் வரைந்த ஓவிய வனத்தைக் காட்டுகின்றார் கவிஞர்.

கவிஞர் கையாண்ட உவமைகளைப் பாருங்கள். மங்கையரின் முகத்திலுள்ள குங்குமப் பொட்டும், சாவகச்சேரிப் பகுதி வெண்மணலும் வலிகாமப்பகுதிச்செம்மண்ணும் அவர் கைவண்ணத்தால் சிறப்படைகின்றன.

### இரசிகமணி கனகசெந்திநாதன்

செக்கச் செவேல் என்ற பலாலித் தக்காளியின் உவமைக்காகக் கவிஞருக்கு ஒரு சபாஷ் போடலாம். இவற்றிலேதான் கந்தவனம் மற்றையோரிலும் பார்க்க விதந்து நிற்கின்றார்.

அவரது கனவுக் காட்சியையும் உவமைச் சிறப்பையும் மேலே கண்டோம். இனி அவர் காட்டும் கம்பனைப் பற்றிய பாடல்களில் இரண்டைப் பாருங்கள்;

கலையொழுகு தமிழ்க்
கடலே
கனலாய்க் காற்றாய்க்
கரைபுரளு கற்பனையே
கற்கக் கற்க
அலைகெழுமி யமிழ்தமெழ
வதிலே தோயு
மனைவரையு மமரரென
வாக்கி நின்று
தலைமைநிலை வகித்தினிது
தமிழ் செய்கின்ற
தரணிபுகழ் காப்பியத்தைத்
தந்தே யெம்மைத்
தலைநிமிரச் செய்ததவப்
புலவ ரேறே
சங்கநிதி நீயெமக்கு
வாழி வாழி!

ஆனகுல ராமன்ற
னடக்க மென்னே
அன்புள்ள தம்பியரின்
பண்பு மென்னே
சானகியின் கற்பென்னுந்
திண்மை யென்னே
தசரதனின் அறங்காக்கும்
வாய்மை யென்னே
ஈனமழிக்கின்ற சிவன்
நன்கு வந்த
இராவணனின் இணையற்ற
இசைதா னென்னே
மானமிகு வீடணனின்
தனிமாண் பென்னே
மாகும்ப கர்ணன்செய்
நன்றி யென்னே!

கம்பரின் பெருமையையும் காவியப் பாத்திரங்களின் படப்பிடிப்பையும் கவிஞர் சொல்லும் திறம் கண்டு வியக்கிறோம். இப்படி இந்நூலிலுள்ள சிறப்பம்சங்களிற் பலவற்றை எடுத்துக்காட்டலாம். விரிவஞ்சி அவற்றை நிறுத்திவிட்டு ஈழத்துப் புலவர் பெருமக்களில் இராமாயணத்துக்குத் தொண்டுசெய்தவர்களைக் கவிஞர் எப்படி நன்றிப்பெருக்குடன் குறிப்பிடுகிறார் என்பதைக் காட்டுகிறேன். இது ஈழத்தின் ஒரு மரபு வழியாகும்:-

கண்டவன் ஒருவன்
உள்ளான்
கம்பனைக் கருத்து
வைத்துப்
பண்டித மணிநற் கங்கை
பாய்ந்துசெய் தொண்
டைப் போலே
உண்டுதொல் புகழிராமன்
உன்னத வமிழ்தை
யள்ளிக்
கொண்டுவந் துலகத்
தார்க்குக்

(7-ம் பக்கம் பார்க்க)

---

## ஆவியுலகத் தொடர்பு—15

# கவிதையில் பதில் தந்த ஆவி!

பாண்டிச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த காரைக்கால் பகுதி திருநள்ளாறு என்ற ஊரில் ஜெயராம் காலனியில் வசிக்கிறார் திரு. குஞ்சிதபாதம் என்ற மீடியம். பள்ளி ஆசிரியராகப் பணிபுரியும் இவரிடம் பத்மம் என்றழைக்கப்படும் பத்மாகினி என்ற ஆவி தொடர்புகொண்டு இவருக்கு வழிகாட்டும் ஆவியாகவுள்ளது. இந்தப் பத்மம் இவர் மூலம் ஏராளமான கவிதைகளை எழுதித்தள்ளுகிறது. இதில் ஒரு விந்தை என்னவென்றால் திரு. குஞ்சிதபாதம் அவர்களுக்குக் கவிதை ஞானமே கிடையாது. இவருக்குக் கவிதையைப் பற்றி எதுவுமே தெரியாது. பத்மம் எழுதும் கவிதைகள், சிறிது இலக்கணப் பிழைகளுடன் இருந்தாலும் படித்து ரசிக்கத்தக்க அளவில் உள்ளன. ஆவி உலகத்தைப் பற்றி ஒரு முறை பத்மத்திடம் கேட்டபோது கவிதையைப் போன்ற பாணியில் பின்வருமாறு எழுதியது;-

'மண்ணுலகைவிட்டு நீர்
விண்ணுலகு வந்து
விட்டால்
ஆவி உலகு பற்றி
அனைத்தையுமே
அறிந்திடலாம்
அனைத்தையும் கூறி
விட்டாலும்
அறிந்ததை மட்டும்
கூறுடுவேன்
அன்புடன் கேட்டு நீர்
ஆதரவு அளித்திடுவீர்.
இறந்தவர் உடலினின்று
இறங்கிய ஆவிகள்
இவ்வுலகம் வந்துவிடும்
இனிதே வாழ்ந்துவிடும்
இறந்தவர் பிறப்பதும்
பிறந்தவர் இறப்பதும்
ஊழ்வினை என்று
சொல்வேன்
உண்மையும் அதுவே
என்பேன்.
இங்குள்ள ஆவிகள்
இனிதே வாழ்ந்தாலும்
உறவினர் நலனுக்கு
உண்மையுடன்
உழைத்திடுவர்
தற்கொலை செய்தவர்க்கும்
தரங்கெட்ட மனிதர்க்கும்
கொலைகாரக் கும்பலுக்கும்
கொள்ளை
அடிப்போர்க்கும்
நன்மையே செய்திடும்
நல்லவர் பலருக்கும்
தனியிடம் உண்டென்று
தன்மையுடன்
உரைக்கின்றேன்.
தகுதிக்கு ஏற்றார் போல்
தனியிடம் ஒதுக்கிவைத்து

**வி. ரவிச்சந்திரன்**

தான் சிறக்க வழிசெய்து
தன் நிலைமை
உணரச் செய்வர்
காலையிலும் மாலையிலும்
கடவுளை வணங்கிட
அனைவரும் ஒன்று கூடி
ஆண்டவனை
வணங்கிடுவோம்
உறுப்புக்கள் ஒன்றுமில்லை
உடைக்கோ வழியில்லை
இருக்கவோ இடம்
வேண்டாம்
இல்லத்திற்கோ
வேலையில்லை.
காற்றுள்ள இடமெல்லாம்
கலந்திருப்போம்
நாங்களெல்லாம்
வெறிபிடித்த ஆவிகள்
வேண்டாத செயல்களை
வெறியுடன் செய்யும்போது
வெறுமனே நிற்பதில்லை
தடுத்து நிறுத்தி நாங்கள்
தன் நிலையை
உணரச் செய்து
பண்பாட்டை வளர்த்து
நாங்கள்
டண்பே டு பழகச்
செய்வோம்
எங்களது வேலைகள்
என்னவென்று நீர்
கேட்பீர்.
எதை நான்
சொல்லிடுவேன்
எப்படித்தான்
உரைப்பேனோ?
அனைத்து உறவினரை
அவ்வுலகில் விட்ட நாங்கள்
ஆர்வமுடன் கண்டிடவே
அவ்வுலகு வருகின்றோம்.
வருகின்ற எங்களை நீர்
வஞ்சமில்லா
உள்ளத்தாலே
வா; வென்று
அழைக்கும் போது
வந்து நிற்போம்
எப்படியும்
இன்முகம் காட்டி நீர்
இனித்துப் பேசும் போது
எங்களின் அறிவுரையை
எப்படியும்
அளித்திடுவோம்
அப்படிப் பேசும் போது
அவரவர் இஷ்டம் போல்
என்னதான் கேட்பதென்று
எண்ணாத பலரும் அங்கு
கேட்கின்றார் கேள்விகளை
கேட்கவே முடியவில்லையே
குடும்பப் பிரச்னையை
குடும்பத்தில்இறந்தோரை
கும்பிட்டு அழைத்திட்டால்
கூறிடுவர் அறிவுரையை
பொன்னையும் பொருளையும்
போதுமளவு தந்திடுக
என்று நீர் கேட்டுவிட்டால்
எப்படித்தான்
முடியும் என்பேன்?
எதிர்கால வாழ்வு பற்றி
எங்களிடம்
கேட்டுவிட்டால்
நல்லதையே கூறிடுவோம்
நயமாகக் கூறிடுவோம்
நாட்டிற்கு நல்லதையே
நாளும் செய்தவர்கள்
பிறப்பில்லா வாழ்வுபெற
பெரு உலகம்
சென்றிடுவர்.
ஆவி உலகு பற்றி
அனைவரும் அறியும்வரை
காற்றோடு காற்றாக
கலந்தே இருப்போம்
எப்போதும்

இவையே கவிதையைப் போன்ற பாணியில் பத்மம் என்ற ஆவி, ஆவியுலகம் பற்றி எழுதியவைகள். இனி இதே ஆவி எழுதிய ஒரு கவிதையைக் காண்போம். இதன் தலைப்பு: கதிர்வேலன் கழலே.

'ஒருவான தனிமை
உறவான நினைவில்
உருவான கனவே
கருவான பொருளின்
கனிவான சுவையில்
கதையான நினைவே.
திருவான திருவின்
திரளான புதைவில்
அருளான கொடையே.
இருளான வாழ்வின்
இயல்பான குரலில்
இசையான தமிழே.
முறையான கல்வி
முதலான தருவில்
முழுதான நிறையே.
குறையான கொள்கை
செயலான முடிவில்
நிறைவான நிழலே!
நிரையான மூப்பின்
நடுவான தீர்ப்பில்
நிலையான நிகழ்வே.
விரைவான வாழ்வின்
விதியான கதையில்
விளையாடும் வினையே.
நதியான வாழ்க்கை
நடுவான சுழலில்
கதியான கலமே.
எதிரான பகையின்
எனதான சதியில்
புதிரான புகலே.
முதிர்வான அறிவின்
முறையான புகழில்
திறனான திருவே.
கதியாளப் போதின்
கருணையாம் வாழ்வில்
கதிர்வேலன் கழலே.'

திரு. குஞ்சிதபாதம் அவர்கள் ஆவிகளால் தன் சொந்த வாழ்க்கையில் பல நன்மைகளைப் பெற்றுள்ளார்கள். இவருடைய வயிற்றுவலி-தாயாரின் ஆஸ்மா முதலியன ஆவிகளால் குணமாக்கப்பட்டுள்ளன. இவரும் இவர் மனைவியும் இரவில் பலமுறை ஆவிகளை ஒளி வடிவில் கண்டிருக்கிறார்கள்.

# புவியியல் துறைத் தலைவருடன் 30 நிமிடங்கள்

அழகிய அடக்கமான வீடு. மென்நீலப்புநிறச் சுவரினிலே வரையப்பட்டுள்ள பரதநாட்டியமாடும் பைந்தமிழ் மங்கையின் ஓவியம் என்னை வரவேற்கின்றது. கதவை மெதுவாகத் தட்டியதும் கண்ணாடி அணிந்த-அறிவின் தெளிவு முகத்திலே சுடர்விடும் நடுத்தர வயதுள்ள-மனிதர் ஒருவர் வருகின்றார்.

"வணக்கம், பேராசிரியர் செல்வநாயகத்தைச் சந்திக்க முடியுமா?'-நான் கேட்டேன்.

'நான்தான் அவர்' என மலர்ந்த முகத்துடன் கூறினார் அவர்.

"தங்களுடன் சில நிமிடங்கள் பேசலாமா?" என்றேன்.

'நிச்சயமாக' என்றார்.

●

திரு. சோமசுந்தரம் செல்வநாயகம் இன்தமிழ் இலக்கிய உலகிற்கு நன்கறிமுகமான பெயர். இலக்கிய அசழ்வுகள்-செந்தமிழ்க் கட்டுரைகள்-புவியியல் ஆய்வுகள்-விண்வெளிப்பயண விமர்சனங்கள் என இவரின் படைப்புக்கள் ஈழத்துப்பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. இவர் தமிழ் வளர் எழுத்தாளர் மட்டுமல்ல, மண்வள ஆய்வாளரும் கூட.

## திறமைக்குப் பரிசு

இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனையில் அமைந்த பொழுது அங்கு மாணவனாகச் சென்ற திரு. செல்வநாயகம் அவர்கள் புவியியலைச் சிறப்புப் பாடமாகப் பயின்றார். அதில் திறமைச் சித்திபெற்ற திரு. செல்வநாயகத்தின் திறமைக்குப் பரிசாக ஆர்தர் லம்பேர்ட் ரூபவிங்கி ஞாபகார்த்தப் புலமைப்பரிசில் கிடைத்தது. மேற்படிப்புக்காக இலண்டன் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற இவர் இந்திராகாந்தி, கிருஷ்ணமேனன், கலாநிதி என். எம். பெரேரா போன்ற உலகப்புகழ்பெற்ற தலைவர்கள் கல்விபயின்ற இலண்டன் பொருளியல் கல்லூரியில் (London School of Economics) முதுமானிப்பட்டநெறியையும் (M. A.) கலாநிதி(PHD) பட்டத்தை பின்பு பெற்றார்.

## புவியியல் வெளியீடுகளின் பொறுப்பாளராக ...

குறித்து காலம் அரசாங்க வெளியீட்டுத் திணைக்களப் புவியியல் வெளியீட்டுப் பகுதிக்குப் பொறுப்பாகப் பதவி வகித்த இவர் 1959 இல் இலங்கைப் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளராகப் பதவியேற்றார். பின்பு விரிவுரையாளராகவும் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பதவி உயர்வு பெற்ற இவர் 1974 ஐப்பசி மாதம் இலங்கைப்பல்கலைக்கழகத்தில் இருந்து விலகி நைஜீரியாவிலுள்ள அகமது பெல்லோ பல்கலைக்கழகச் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியை ஏற்றார். அங்கு மூன்றாண்டுகள் சாதனையும் போதனையும் புரிந்தபின் 77 அக்டோபரில் இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகப் புவியியல் துறைத் தலைவராக ஈழம் திரும்பியுள்ளார்.

இவ்வளவும் நான் ஏற்கனவே அவர் பற்றித் தெரிந்து கொண்ட விஷயங்கள்.

●

'உள்ளே வருகிறீர்களா?' -பேராசிரியர் கேட்டார்.

வீட்டின் ஹாலுக்குள் பிரவேசித்தேன். ஹாலின் பின்னுள்ள அவரின் மேசைக்கு முன்பாக இருவரும் அமர்ந்தோம்.

'யாழ். வளாகத்தின் புவியியல் துறைத் தலைவராகத் தாங்கள் பதவியேற்றமைக்கு எனது வாழ்த்துக்கள்.''

நன்றி எனக் கூறி அவரும் புன்னகை பூத்தார்.

'தாங்கள் முதுமானிப்பட்டம், கலாநிதிப்பட்டமெல்லாம் பெற்றிருக்கிறீர்களே, இப்பட்டங்களைப் பெறுவதற்கு என்ன தலைப்புக்களில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்தீர்கள்?'

பேராசிரியர்: முதுமானிப் பட்டத்திற்கு யாழ்ப்பாணப் பகுதியின் நிலப்பயன்பாடு எனும் ஆய்வினை மேற்கொண்டேன். இது தொடர்பாக நான் எழுதிய ஆய்வுக்கட்டுரையின் பிரதி ஜெர்மனியிலுள்ள ஹைடல்பேர்க் பல்கலைக்கழக நூலகப்பிரிவில் தென்கிழக்காசிய ஆராய்ச்சிக்கு உதவுமென வைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வுக் கட்டுரையைப் பரிசீலனை செய்த பரீட்சகர்களுள் உலகப் புகழ்பெற்ற நிலப்பயன்பாட்டாராய்ச்சியாளரான பேராசிரியர் சர். டட்லி ஸ்ராம்பும் ஒருவராவர்.

'மேலும் கலாநிதிப் பட்டத்திற்கு இலங்கையின் வரண்ட பிரதேச நில ஆட்சிமுறை பற்றிய பிரச்னையை ஆய்வுக்கு எடுத்தேன். இந்த ஆய்வு பற்றி கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தென்னாசியத்துறை இயக்குநர் பி.எச். பாமர், 'இந்தியாவில் விவசாயக் குடியேற்றம் என்னும் தலைப்பில் 1974-ம் ஆண்டு வெளிவந்த அவரது நூலில் மிகவும் விதந்து பாராட்டியுள்ளார்.'

இவ்வாறு கூறியபேராசிரியரிடம் 'உலகப்புகழ்பெற்ற ஆய்வாளராகத் திகழும் தாங்கள் எழுதிய ஆய்வுக்கட்டுரைகள் வெளிநாட்டு நூல்களில் வந்துள்ளனவா' எனக் கேட்டேன். 'நிறைய வந்துள்ளன' எனக் கூறிய பேராசிரியர் பேசுகிறார்:

'சுமார் இருபத்தைந்து கட்டுரைகளுக்கு மேலாக ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளேன். இவை பல்வேறு வெளிநாட்டுச் சஞ்சிகைகளிலும் வெளிவந்தவையாகும்.

சந்திப்பு:
பற்றிமாகரன்

யுனெஸ்கோ நிறுவனத்தின் உதவியுடன் வெளியிடப்பட்ட உலக விவசாய அற்லஸ் (World Atlas of Agriculture) என்னும் தொகுதியில் எனது இலங்கையின் விவசாயம் பற்றிய கட்டுரையும் நிலப்பயன்பாட்டுத் தேசப்படங்களும் வெளியாகியுள்ளன. இதைத் தவிர மலேஷியாவின் 'பொருளாதாரச் சஞ்சிகை', 'தமிழ் ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு' போன்ற வெளிநாட்டுச் சஞ்சிகைகளிலும் எனது ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. இலங்கையில் இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்று நூல் தொகுதியிலும் மற்றும் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவரும் சிறந்த ஆராய்ச்சிச் சஞ்சிகைகளிலும் எனது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இலங்கைஅரசாங்ககல்விவெளியீட்டுத்திணைக்களம்நான் மொழிபெயர்த்த நான்கு நூல்களைப் பல்கலைக்கழகப் பாவனைக்கான நூல்களாக வெளியிட்டுள்ளது.''

நான்: ''தற்பொழுது ஏதாயினும் தங்கள் நூல்கள் வெளிநாட்டில் வெளிவர உள்ளனவா?''

பேராசிரியர்: ''இலங்கையின் பசுமைப் புரட்சி பற்றிய எனது ஆய்வுத் தொகுப்பு ஒன்று ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை சமூக அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடாக விரைவில் வெளிவரவுள்ளது''

அவருடைய வரவேற்பு அறையில் இருந்த அழகிய ஓலையால் செய்யப்பட்ட கைப்பணிப் பொருட்கள் என் கண்ணைக் கவர்ந்தன. இவைகள் நைஜீரியா மக்களின் கலைப் படைப்புக்கள்போலும் என்றேன்.

''ஆமாம் நைஜீரியாவில் இருக்கையில் வாங்கினேன்'' என்றார்.

''நைஜீரியாவின் கல்வி அமைப்புக்கும் இலங்கையின் கல்வி அமைப்புக்கும் வேறுபாடு உண்டா?''

''நிறைய உண்டு. அது பொருளாதார வளம் நிறைந்த நாடு. எனவே பெருந்தொகையானபணத்தைக்கல்விக்கெனச் செலவிட்டு வருகின்றார்கள். பல்கலைக்கழக ஆய்வுகளுக்குத் தேவையான சகல நவீனவசதிகளும் அங்கு உண்டு. ஆனால் நமது நாடு பொதுவாகவே ஏழைநாடு. எனவே கல்வியில் நவீன ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்கு உரிய-போதிய-வசதிகள் இல்லாமல் இருப்பது இயற்கையே.''

## தமிழாராய்ச்சி மகாநாட்டில்

''தமிழில் புலமையுள்ள தாங்கள் தமிழாராய்ச்சி மகாநாடுகளில் பங்குபற்றவில்லையா?'' என இலக்கியத் துறைக்கு எனது பேச்சைத் திருப்பினேன் நான்.

''மூன்று மாநாடுகளில் பங்குபற்றினேன்'' என அடக்கமாகப் பதிலளித்தார் பேராசிரியர்.

''என்ன தலைப்புகளில் ஆய்வுரைகள் வழங்கினீர்கள்?''

''கோலாலம்பூரில் அறிவியல் நூல்களைத் தமிழாக்கம் செய்வதிலுள்ள நுணுக்கங்கள்'' என்னும் தலைப்பிலும், தமிழக மகாநாட்டில் 'சங்க இலக்கியத்தில் ஐந்திணை நிலப்பிரிவு' என்னும் பொருளிலும், யாழ்ப்பாண மகாநாட்டில் 'சங்க இலக்கிய ஐந்திணை நிலப்பிரிவுகளுள் ஒன்றான 'மருத நிலம்' பற்றியும் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்தேன்.''

''மூன்று மாநாடுகளிலும் பங்குபற்றியவர் என்ற முறையில் இம்மாநாடுகள் பற்றிச் சிறிது கூறுவீர்களா?'' என்றதற்கு, ''கோலாலம்பூர் மகாநாடு அதிக அளவு பிரதிநிதிகள் வந்தமையால் சிறப்புப் பெற்றது. தமிழக மகாநாடு உண்மையிலேயே பெருவிழாவாகவும் பெருங்கொண்டாட்டமாகவும் அமைந்தது. யாழ்ப்பாண மகாநாடு ஆராய்ச்சித் துறையில் சிறந்து விளங்கியது. ஆயினும் மூன்று மகாநாடுகளும் ஒன்றுக்கொன்று சோடைபோகாமல் முழுநிறைவுடன் நடந்தன'' என்றார் அவர்.

## இலக்கண நடையை எளிமையாக்க வேண்டும்

இறுதியாக ''தமிழில் இன்று வெளிவரும் படைப்புக்கள்பற்றித் தங்கள் கருத்தைக் கூற முடியுமா?'' எனக் கேட்டேன்.

அதற்கு அவர் ''தமிழ் பல துறைகளிலும் வளர்ந்துவருகிறது. ஆயினும் தமிழ் இலக்கண வரம்பு மீறப்படாமல் அறிவியல் வளர்ச்சிக்கேற்ப வளரவேண்டும் என்பதேஎனது கருத்து. புதியவைகளை படைக்கின்றோம் என்று கூறிக்கொண்டு மொழியின் இலக்கண அமைப்பைச் சிதைக்கக் கூடாது. இலக்கண வரம்பை மீறாது இலக்கண நடையை எளிமைப்படுத்துவதே நல்லது'' என்றார்.

கொழும்பு புலவர் பாண்டியனிடம் தாம் தொல்காப்பியம் பயின்றதாகப் பேச்சின்போது அவர் தெரிவித்தார்.




எண்ணிலே வாழ்வு—7

# நிர்வாகத் திறமை மிக்கவர் ஆறு எண் காரர்

''பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு...''
(குறள் 482)

காலத்தோடு பொருந்துமாறு ஆராய்ந்து செய்கின்ற திறமை; செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டப்படும் கயிறாகும் என்று வள்ளுவர் பெருந்தகை கூறியதற்கு முற்றிலும் பொருத்தமானவர்கள் ஆறு எண்காரர்கள். பகைவரை வெற்றிகொள்ளும் அரசனும், கோட்டானை அழிக்கும் காகமும் காலநேரம் அறிந்தே செயல்படுகின்றது. இவ்வகையில் இவ்வெண்காரர்களும் ஒளி மிகுந்த வாழ்க்கையை, காலத்தின் தன்மையை உணர்ந்துசெயல்பட்டு வெற்றியடைகின்றார்கள்.

ஒவ்வொரு மாதத்தின் 6, 15, 24-ந் திகதிகளில் பிறப்பவர்கள் சுக்கிரனின் ஆதிக்கத்துக்கு அதிபதியான ஆறு எண்காரர்களாகும். இவர்களில் ஏப்ரல் மாதம் 20-ந் திகதிக்கும் மே மாதம் 27-ந் திகதிக்குள்ளாவது; செப்டம்பர் மாதம் 20-ந் திகதிக்கும் அக்டோபர் மாதம் 27-ந் திகதிக்குள்ளாவது சுக்கிர ஆதிக்கத்தில் பிறந்திருப்பின் அதிஷ்டத்திற்குரியவர்கள். சுக்கிரனை உரோமானியர்கள் காதல்தெய்வமாக வழிபடுகிறார்கள். இதைப்போல ஆறு எண்காரர்களும் காதல் விவகாரங்களில் சிறந்து விளங்குவதுண்டு.

ஜோதிடத்தில் சுக்கிரன் களத்திரம், சந்தோசம், சுகபோகம், வாகனாதிகள், விகடப்பேச்சு, நடனம், நடிப்பு, அலங்காரம் ஆகியவற்றுக்கு காரகாதிபத்தியங்களாக

★ அண்ணன் ★

சொல்லப்படுகின்றது. ஒவ்வொருவருடைய ஜாதகத்திலும் சுக்கிரன் பலவீனப்பட்டோ அல்லது வேறு கெட்ட கிரகங்களுடன் சேர்க்கை அடைந்தோயிருந்தால் இப்பலன்களை சிறப்பாக அனுபவிக்கமுடியாது.

கைரேகைக் கலைகளிலும், வெள்ளி மண்டலம் என குறிக்கப்படும் மேட்டைக்கொண்டு, காதல், சிற்றின்பம், பிரியம், மனவெழுச்சியை கூறுகின்றார்கள்.

## 'அது அப்படித்தான்' என்பவர்கள்:

ஆறு எண்களிலே பிறந்தவர்கள் மற்றவர்களை அதிகாரம் செய்து வாழ்வதில் வல்லவர். இவர்கள் இளகாத மனம் கொண்டவர்கள். பிடிவாதக் குணத்தினால் பலரையும் பல தடவைகளில் பகைத்துக் கொள்ளும் ஆற்றல்கொண்டவர். தங்கள் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தும்போது அதற்கான காரணங்களை வெளிக்கொணராமல், அது அப்படித்தான் என உறுதிக் கூறுவதில் வல்லவர்.

இவர்கள் அழகுப் பிரியர்கள் எதிலும் அழகாக உடுக்க வேண்டும், தன்னைப்போல மற்றவர்கள் இருக்கக்கூடாதென சதா சிந்திப்பவர்கள். தாங்கள் வாழ்வில் குறிக்கோள் உள்ளவர்கள் என மக்கள் எண்ணும்படி நடந்துகொள்பவர். யாருடனும் அதிகமாக பழகமாட்டார்கள். சொகுசாக வாழ விரும்புவர். மற்றவர்கள் எதைப்பற்றிப் பேசினும் கருத்தில்கொள்ளமாட்டார்.

## பார்த்தமாத்திரத்தில் பெருமையுடையவர்கள்

தம்முடன் பழகிய அன்புள்ளம் கொண்டவர்களை, உபசரிப்பதிலும், அவர்களுக்கு உதவுவதிலும் முன் நிற்பவர்கள். விருந்துகள் கொடுத்து கௌரவிப்பதிலும் நிகரானவர்கள். ஒருவர்மீது அபிப்பிராய பேதங்கள் ஏற்படுமானால் நீண்ட யோசனையின் பின்னரே செய்வார்கள். இவர்கள்

(7-ம் பக்கம் பார்க்க)

இன்று மட்டும்
ராணி தினசரி 10-30, 2.30, 6·00, 9.30.
சுஜாதா- விஜயகுமார் நடித்த
[யாழ்ப்பாணம்]
அவள் ஒரு தொடர்கதை
[புதிய பிரதி]
12-12-77 கஸ்தூரி விஜயம்
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன், சுந்தரராஜன், கே. ஆர். விஜயா
நடித்த
கே. பாலசந்தரின்
நா ணல் [புதிய பிரதி]

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
தெய்வ மகன்

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
தாயைக் காத்த தனயன்
(புதிய பிரதி)

Regal (Jaffna)
"KRAKATOA" IS A STUNNER!
A Grand Adventure spectacle designed to knock you out.
It is Sensational. An artistic and technical triumph.
Adults may find themselves biting their nails.
Now running to packed houses in its
2nd Week 70 M. M.
"Krakatoa East of Java"
Cinerama wide screen! [Techni color]
Daily at 4-15 7-00 & 9-30 P. M. only
Sat, Sundays 10-30, A.M. 1-30 4-15 7-00 & 9-30P.m.

10-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
யாழ்நகர் ஜெமினி, ஜெயசித்திரா
நடித்த
தசாவதாரம்
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி -லக்ஷ்மி : நிர்மலா
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடியது
★ கமலஹாசன் ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத்
★ ஸ்ரீதேவி ★ ஒய். விஜயா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
மூன்று முடிச்சு
திரைக்கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

## நிர்வாகத்.....

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

கெஞ்சினால் மிஞ்சுபர். மிஞ்சினால்கொஞ்சுவர்.

மனதிலே தோன்றும் எண்ணங்களை விபரீதம் ஏற்படுத்தும் வகையானவையாக இருந்தாலும், பயமின்றி துணிச்லுடன் கூறும் ஆற்றல்கொண்டவர்; இவர்கள் சுலபமாக கோபம் கொள்வதுண்டு. கோபம் மிஞ்சிடும்போது, எந்த விடயத்தையும் மறைக்காமல் கூறிக்கொள்வர். இதனால் பலரைப் புண்படுத்தும் விடயத்தைப் பேசிவிட்டோமென பின்னர் மனம் வருந்துவார்கள். கோபமும் சிலநேரத்தில் தணிந்துவிடும். இவர்கள் முக்கியமாக கோபத்தை அடக்கிக்கொண்டால் மகான்களாக சுடர்விட்டுப்பிரகாசிப்பர்.

இவர்களைப் பார்த்தமாத்திரத்தில் எவரும் பல சௌகரியங்கள் உள்ளவரென மயங்குவதுண்டு. சொற்ப வருமானத்தைக்கொண்டு பகட்டாக வாழ்வதில் வல்லவர்.

### மனச்சாட்சிக்கு விரோதமற்றவர்

எந்த ஒரு காரியத்தையும் மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்துகொள்ளமாட்டார்கள். இவர்களுடைய யோசனைகளும், எண்ணங்களும் சுயநலத்துக்காகவே செயல்படும். இவர்களுக்கு குடும்பத்தைப்பற்றிக் கவலை கிடையாது இன்று சந்தோசமாகக் கழித்தால் போதுமென்பதே சித்தாந்தம்.

கலைகளில் அதிக ஆர்வமுடையவர்கள், நுண்கலைகளை ரசிப்பதிலும், மயங்குவதிலும் வல்லவர். காதல் எப்போதும் தூய்மைகொண்டதாய் இருக்கவேண்டுமென நினைப்பவர். சமூகத்தைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். காதல் கொள்வதாயின் ஆவியின் சங்கமத்தைக் குறிப்பதாயிருக்கும் காதலைப்பெறுவர். ஒவ்வொரு துறைகளிலும், தமது திறமையை வெளிக்காட்டுவதில்வல்லவர். நிர்வாகத் திறமைபடைத்தவர்கள் எடுத்தகாரியத்தில்வெற்றி பெறும் வல்லமை மிக்கவர் பிறரால் இவர்களது நிர்வாகத்திறமை போற்றப்படும்.

### ஆறு எண்காரர்கள் பிரபல்யமானவர்கள்

பாரதத்தின் தலைவர் காமராஜர், தமிழினத்தின் நிகரில்லாத் தலைவர் பேரறிஞர் அண்ணா, அமரர் அல்பிரட் தங்கராஜா துரையப்பா, கப்லோட்டிய தமிழன் சிதம்பரப்பிள்ளை போன்ற நிர்வாகத் திறமைபடைத்து, அகில உலகிற்கும் புகழ்சேர்ந்த

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30.
சிவாஜி-சாவித்திரி
பந்தபாசம்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி ப. 2-30
எம். ஜி. ஆர்- லதா
உழைக்கும் கரங்கள்

றியோ [யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - கே. ஆர் விஜயா
நடித்த
செல்வம் [புதிய பிரதி]

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
குலமகள் ராதை

## யாழ். மாவட்ட கலவர அகதிகளுக்கு காருண்யநிதி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கச்சேரியில் சமூக சேவை இலாகாவிற்கு, நேற்றுக் காருண்ய நிதி பெறுவதற்காக நூற்றுக்கணக்கானோர் படையெடுத்தனர்.

ஆண்களுக்குப் புறம்பாகவும் பெண்களுக்குப் புறம்பாகவும் இந்நிதி வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பங்கீட்டுப் புத்தகம், அடையாள அட்டையைச் சமர்ப்பித்தவர்களுக்குக் காருண்ய நிதிக் கொடுப்பனவுப் பத்திரம் வழங்கப்பட்டது.

இப்பத்திரத்தை நிரப்பி, அந்தந்தப் பகுதிக் கிராமசேவகரின் சிபார்சுடனும், உதவி அரசாங்க அதிபர் சிபார்சுடனும் சமூக சேவை இலாகாவிடம் சமர்ப்பித்து இப்பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

கலவரத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இந்நிதிக்கு விண்ணப்பிக்கலாம் என்று கூறப்படுகிறது. [க-இ]

### பிராந்திய முகாமையாளர்

[நெல்லியடி]

மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளராக திரு எல் பி எக்கநாயகா நியமனம் பெற்று யாழ். தலைமைச் செயலகத்துக்கு வந்துள்ளார்.

முன்பு இவர் மக்கள் வங்கியின் அபிவிருத்திஅதிகாரியாக கொழும்புதலைமை அலுவலகத்தில் கடமையாற்றிவந்தார். [உ]

## ஞானமும்.....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மலிவாய்வெள் ளெயிற்றரவ
மயின்மீது மருண்டுவிழும்
சலியாத நிலையரியுந் தடங்கரியு
முடன் சாரும்
புலிவாயின் மருங்கணையும்
புல்வாய புல்வாயும்''

தம் அருளின் தன்மையை உலகம் அறிந்து உய்யத்தான், இயல்பாகவே பகை கொண்ட சர்ப்பத்தையும், சந்திரனையும் சடாபாரத்தில் தரித்துள்ளார். சர்ப்பத்தை தேகத்திலும் ஆபரணமாகத் தரித்துள்ளார். இறைவனது இவ்வாறான வேடத்தை அடியார்கள் இலக்குய நோக்கிலே எடுத்துப் பாடும் பொழுது நமது உள்ளத்திலே நன்றாகப் பதிகிறது. சிவபெருமானுக்கு இடப்பாகத்திலே மயில் போன்ற சாயலையுடைய உமையம்மையார் இருக்கிறார். அவரைக் கண்டு சிவபெருமான் அணிந்துள்ள சர்ப்பம் . மயிலெனக் கலங்குகின்றது.

''தெய்வப் பிறை இருந்த
திருநுதற் பேதையே
கண்டு உகண்டு அரவம்
மயில் எனக் கலங்க''

எனக் கல்லாட ஆசிரியரும் கூறுகிறார். உமையம்மையார் சர்ப்பத்துக்கு அஞ்சுகின்றார். ''யானையுரி போர்த்த மணவாளனாகிய இறைவனின் சடை இருக்கும் சந்திரனை மின்னல் என நினைத்து தேகத்தில் இருக்கும் பாம்பு அஞ்சுகின்றது யானைத்தோல் முகிலாக சருவகிக்கப்படுகிறது. நாகசர்ப்பம் இயற்கையான அருளினால் தன்குணம் கெட்டுக் கிடக்க அது மயிலுக்கும் மின்னலுக்கும் அஞ்சிக் கிடப்பதாகத் தற்குறிப்பேற்ற அணி பொலியக்கூறி மகிழ்ச்சிஅடைகிறார் நாவுக்கரசர்

''நாகத்தை நங்கை அஞ்ச
நங்கையை மஞ்ஞை
என்று
வேகத்தைத் தவிர நாகம்
வேழத்தின் உரியை
போர்த்து
பாகத்தின் நிமிர்தல் செய்
யாத் திங்களை மின்னென்
றஞ்சி
ஆகத்திற் கிடந்த நாகம்
அடங்கும் ஆரூர
ரைக்கே.',

பெருமகனார்கள் ஆறு எண்ணில் பிறந்தவர்கள்.

வாசக நேயர்கள் பலர் எமது முகவரிக்கு சில சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வதற்குப் பதில் எழுதவேண்டுமென வற்புறுத்திக் கடிதம் எழுதுகின்றனர். அவர்களுக்கெல்லாம் பதில் எழுத நாம் ஆவலில் உள்ளோம். எனவே சுயவிலாசமிட்ட அஞ்சலட்டையுடன் எமக்கு எழுதுங்கள் பதில் அளிப்போம்.

ஆறு எண்காரர்களுக்கு 9, 18, 27-ந் திகதிகள் மிக முக்கியமானதாகும். 6, 15, 24-ந் திகதிகளும் விஷேசமானது. 3, 12, 21, 30, 5, 14, 23-ந் திகதிகளில் அலைச்சல்களும், காரிய விக்கினங்களும் ஏற்படுவதுண்டு. மற்றைய தினங்கள் சுமாரானவை.

இவர்களுக்கு 3, 6, 9 எண்களைக்கொண்டவர்களே நல்ல நண்பர்களாக உள்ளனர். ஒன்பது எண்ணில் பிறந்தவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் இவர்களை விட்டு அகலமாட்டார்கள். சுக துக்கங்களில் பங்கு பற்றுவர். இரக்க சுபாவமுடையவர்.

இவர்கள் குடும்ப விடயங்களில் அதிக அன்பு வைத்து வாழ்வை வளமாக்க விரும்புவர். சிற்றின்பங்களில் அதிக ஈடுபாடுடையவர். காதலித்தால் அதிக விசுவாசமுடையவர்களாக இருப்பார்கள் எனவே இவர்கள் திருமணம் செய்கின்றபோது 1, 4, 6, 9 எண்ணைக் கொண்டவர்களைத் திருமணம் செய்வது விரும்பத்தக்கது.

நாவல், நீல நிறங்களையே விரும்பி அணிவதுண்டு. இது இவர்க்கு அதிர்ஷ்டத்தையும் அளிப்பதுண்டு. இவர்களுக்கு அதிர்ஷ்டமான நவரத்தினம், வைரம், இதை அணிந்து பலர் தமது கஷ்டங்களைத் தீர்த்துக் கொண்டதாக அனுபவம் சான்று பகருகின்றது

குறிப்பாக ஆறு எண்காரர்களுக்கு3 9: 6 1; 6-4 என்ற முறையில் விதி எண்கள் அமையப்பெற்றவர்கள் வாழ்க்கையில் பலவித சுக போகங்களுடன் சிறப்பான வாழ்க்கை அமைந்தள்ளது.

## கவிஞர்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

குவிக்கின்றான்
குவிக்கின்றனே!

பண்டிதமணி சி. க. அவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்தியதைப் போலவே புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, வித்துவான் வேந்தனார் என்போருக்கும் ஒவ்வொரு பாட்டினால் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இராமாயணம் முழுவதையும் படிய மலை தர்க்கத்தில் இறங்குவோரைப் பற்றியும் அரைத்த மாவையே அரைப்பதைப் போல மற்றையோர் சொல்லும் வியாக்கியானங்களையே திருப்பிச் சொல்லும் கிளிப்பிள்ளைப் பேச்சாளர்களையும் கவிஞர் சில இடங்களிற் குறிப்பிட்டுச் சாடியுள்ளார்.

நூற்றொரு பாட்டாலே கம்பனைப் போற்றியுள்ள இக் கிரிமலையினிலே என்ற நூல் இரசிகர்களுக்கு நல்விருந்தாகும். கம்பரைக் கண்டு கம்பரே வாரும் வாரும் என அணைத்துக் கவிதையாகிய நன்முத்துக்களைக் குளிக்க விருப்புவோர் இதை நிச்சயம் படித்துப் பார்க்கவேண்டும்

இனி, மலைநாட்டிலே எலும் பொடியமாடாய் உழைக்கின்ற தோட்டத்தொழிலாளர்களைப் பற்றியும் சமுதாயச் சீர்கேடுகளைப் பற்றியும் கவிஞர் கொண்டுள்ள கருத்துக்களை அடுத்த கட்டுரையிற் பார்ப்போம்.

# யாழ்ப்பாணத்தில் நீதிமன்ற செயலகம்!

## விரைவில் அமைக்கப்படும் என பிரதி அமைச்சர் தகவல்

]கொழும்பு]

யாழ்ப்பாணத்தில் நீதிமன்றச் செயலகம் ஒன்று விரைவில் அமைக்கப்படுமென்று பிரதி நிதி அமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜா தேசிய அரசுப் பேரவையில் கூறினார்.

இந்தச்செயலகத்தைப் பண்ணையில் அமைக்க முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது இதை சட்டத்தரணிகள் பலர் ஆட்சேபித்ததால் அத்திட்டம் கைவிடப்பட்டது என்றும் விரைவில் யாழ். எம்பி யின் ஆலோசனையின்படி படி உரிய இடத்தில் நீதிமன்றச் செயலகம் அமைக்கபடுமென்றும் திரு. ரணராஜா கூறினார்.

### 4,250 கைதிகள்

அவர் மேலும் கூறியதாவது 'நாடு முழுவதிலுமுள்ள சிறைகளில் இப்போது 4,250 கைதிகள் இருக்கின்றனர். அவர்களுக்குப் போதிய வசதிகள் கிடையாது. வீதிகளில் அவர்கள் அழைத்துச்செல்லப்படும் போது கால்நடைகள் போல் அழைத்துச்செல்லப்படுகிறார்கள்.

### பேரவையில் 39 சட்டத்தரணிகள்

'இந்தப் பேரவையில் 39 சட்டத்தரணிகள் எம்.பிகளாகவும், ஐந்து சட்டத்தரணிகள் பிரதி அமைச்சர்களாகவுமுள்ளனர். சட்டத்தரணிகளில் மக்கள் எவ்வளவு தூரம் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.' [ம.இ]

## கல்வி அமைச்சர் விடுத்த 'எச்சரிக்கை!'

(கொழும்பு)

நீதிமன்றங்களில் தமிழ் மொழி விடயத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் தொடர்ந்து வற்புறுத்தி வந்தால் மலேஷியாவைப் போன்று இன அடிப்படையில் நீதிபதிகளை நியமிக்கவேண்டிய நிலை ஏற்படும்.

கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன தேசிய அரசுப் பேரவையில் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

''சிங்களவர்கள் தமிழும் தமிழர்கள் சிங்களமும் படிக்கக் கூடிய நல்ல சூழ்நிலை இப்போது உருவாகிவருகிறது. இதனால் இரு இனங்களுக்கு மிடையேயுள்ள பல பிரச்னைகள் இயல்பாகவே தீர்ந்து விடும்'' என்று கூறிய கல்வி அமைச்சர்;

''வடக்கு-கிழக்குக்கு அனுப்பப்படும் சிங்கள ஆசிரியர்களை சகல தமிழ்மக்களும் வரவேற்க வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டார். [ம]

## நாடு முழுவதும் இரவுச்சந்தை

]கொழும்பு]

நாடு முழுவதும் இரவுச் சந்தையை ஏற்படுத்த அரசு தீர்மானித்துள்ளதாக உள்ளுராட்சி,வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா தெரிவித்தார். ]இ]

## தமிழ் அரச ஊழியர் சிங்களத் தேர்ச்சி: 'அமிர்' பிரதமருக்கு கடிதம் எழுதுவார்

]கொழும்பு]

சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக இதுவரை பதவி உயர்வு, சம்பள உயர்வு ஆகியவற்றைப் பெறுதிருக்கும் 56ம் ஆண்டுக்கு முன்னர் பதவியில் சேர்ந்த தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு உடன் சம்பள உயர்வு, பதவி உயர்வு ஆகியவற்றை உடன் வழங்கவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பிரதமரைக் கோருவார்.

இது தொடர்பாகத் திரு. அமிர்தலிங்கம் பிரதமருக்கு உடன் கடிதம் எழுதவேண்டும் என்று தேற்று முன்தினம் கொழும்பில் கூடிய தமிழர் விடுதலைக்கூட்டணி ஆட்கிமன்றக்குழு முடிவுசெய்தது.

சிற்றூழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்றும் திரு.அமிர்தலிங்கம் பிரதமரிடம் கோரிக்கை விடுப்பார்.

யாழ்ப்பாணத்தில் இம் மாதம் 19ம் திகதி நடைபெறும் காப்புறுதிக் கூட்டுத்தாபன அலுவலகத் திறப்பு விழாவில் கலந்துகொள்ளுமாறு கூட்டுத்தாபன ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்தமையினால் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பிக்களை அதில் கலந்து கொள்ள அனுமதிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. [ம-இ]

## ஆறும்....

[2ம்பக்கத் தொடர்ச்சி]

நிலத்தைநோக்கிநீந்திக்கொண்டிருந்த நேரத்தில், தம்பி மூட்டையுடன் நீந்தக் கஷ்டப்படுவதைக்கண்ட மூத்தவன், ''தம்பி நிலத்துக்கிட்ட வந்து விட்டோம்' கம்பளிமூட்டையில் தண்ணீர் ஊறிவிட்டது போலிருக்கின்றது. அதுதான் உன்னைக் கீழே இழுக்கின்றது. அந்தக் கைவிட்டுவிட்டுச் சும்மா நீந்து நானும் உதவி செய்கின்றேன்'' என்றார். அதற்குத் தம்பியானவன் ''அண்ணா! கம்பளி மூட்டையை நான்விட்டுவிட்டேன். ஆனால் கம்பளிமூட்டை என்னைப் பற்றிக் கொண்டு விடமாட்டேன் என்கிறது'' என்றான். அதற்குப் பெரியவன், ''என்னடா? விசர்ப் பேச்சு பேசுகின்றாய்? கம்பளி மூட்டை உன்னை எப்படி பிடிக்கும்?'' என்று சொல்லிக் குனிந்து பார்த்தான். தம்பியைப்பற்றிக் கொண்டிருந்தது கம்பளிமூட்டைஅல்ல நீரில் மிதந்து உயிர்தப்பி வந்த கறுத்தக்கரடிக்குட்டி அதுதான் அவனைத் தனது இருகரங்களாலும் பற்றிக்கொண்டு விடமாட்டேன் என்றது கறுத்தக் கரடிக் குட்டியைக் கம்பளிமூட்டை என்றெண்ணித் தம்பி முதல் பற்றினன். ஆனால் இப்பொழுது அவன் கரடிக்குட்டியை விட எத்தனித்தும் கரடிக் குட்டி அவனை விடவில்லை.

உலகத்தில் பற்றுவிடுவதென்றால் இலேசான காரியமல்ல. நாங்கள் கம்பளிமூட்டைகளைத் தள்ளத்தள்ள அவைகள் கரடிக்குட்டிகள் மாதிரித் திரும்பித் திரும்பிப் பற்றிக்கொள்ளும். அண்ணன்காரன் பார்த்துவிட்டுக்காலால் இரண்டு மூன்று பலத்த உதை கொடுத்துக் கரடிக்குட்டியை விலத்தினன். தம்பி உயிர் தப்பி இருவரும் கரைசேர்ந்தார்கள்.

பற்றுவிடுவதற்கு இறைவனின் அருள் வேண்டும். அல்லது முடியாது. முற்றும் துறந்த ஞானிகள், முனிவர்கள் கூட 'கம்பளிமூட்டைகளினாலும், கரடிக்குட்டி'களினாலும் தங்கள் தவமிழந்தார்கள்' இதைத்தான் திருவள்ளுவர்,

'பற்றுக பற்றற்றான்
பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'

என்று சொன்னார். பற்றுவிடுவதற்குப் பற்றற்றான் பற்றினைப் பற்றவேண்டும்.

பற்றற்றான் பற்றினைப் பற்றுதற்கு அவன் அருள்வேண்டும்.

'உன்னைத்துதிக்க அருள் தா-
இன்னிசையுடன்
உன்னைத்துதிக்க அருள்தா
பொன்னைத் துதித்து
மடப்பூவையரைந்
துதித்து
இன்னத்தன மடைந்து
[சித்தங்கலங்கிடாமல்
உன்னைத் துதிக்க அருள்தா'

அவன் அருள் பெற்று அவனருளாலே அவன் தாள் வணங்கி அவனைப் பற்றல் வேண்டும்.

அவன் அருளைப்பெறுவதற்கு ஐந்தெழுத்து ஒரு புணை (தெப்பம்-Buoy) ஆக உதவும்,

'தனியனேன் பெரும்
பிறவிப் பௌவத்தெவ்வத்
தடந்திரையால்
எற்றுண்டு,
பற்றொன்றின்றிக்
கனியை நேர்துவர்
வாயார் என்னுங் காலாற்
கலக்குண்டு,காமவான்
சுறவின் வாய்ப்பட்டினி
யென்னே உய்யுமாறென்
றென்றெண்ணி
யஞ்செழுத்தின் புணை
பிடித்துக்கிடக்கின்றேனை
முனைவனே முதலந்த
மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்
கொண்டாய்
மூர்க்கனேற்கே.'

—திருவாசகம்.

## பேரவையில் சிந்தியவை

**கல்வி அமைச்சர்:** எல்லாளனைப் போன்று நீதியான நீதி அமைச்சர் இப்போது எமக்குக் கிடைத்துள்ளார்.

**டாக்டர் பி. எம் பி. சிறில்;** கடந்த அரசைத் திட்டுவதையும் சோஷலிஸம் சோஷலிஸம் என்று கூறுவதையும்விட்டுவிட்டு பேசுவதை செயலில் காட்டுங்கள்.

**அனுராதபுரம் கிழக்கு எம். பி. ஹேரத்:** இனக்கலவரத்தின் போது அனுராதபுரம் ஆஸ்பத்திரியில்சிங்கள இளைஞன் ஒருவருடைய இரத்தத்தைச் சோதனை செய்துகொண்டிருக்கும் வேளையில் டாக்டர் சிவசம்பு என்ற தமிழர் கத்தியால் குத்தப்பட்டார். இச்செயலுக்காக சுதந்திரக்கட்சி மட்டுமல்ல சிங்கள இனமே வெட்கப்படவேண்டும்!

**'அமிர்':** குற்றவியல் நீதி விசாரணைக் கமிஷன் சிறை வைத்த பலரை இந்த அரசு விடுதலைசெய்தது. அதேபோல் அக்கமிஷனால் அபராதம் விதிக்கப்பட்டு அபராதத் தொகையைக் கட்டமுடியாது கஷ்டப்படுவோருக்கும் அரசு சலுகை அளிக்கவேண்டும்.

**அமைச்சர் தேவநாயகம்;** முன்னர் மரண] விசாரணை அதிகாரிகளாக இருந்த சிலர் கஞ்சா வியாபாரிகளாக இருந்தனர்.

**'அமிர்';** தோட்டத்தொழிலாளரின் தொழில் பிணக்கு தொடர்பான வழக்கு ஒன்று 10 வருடங்களாக விசாரிக்கப்பட்டது. இவ்விசாரணை முடிவதற்குள் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட சிலர் இறந்துபோயினர்; சிலர் இந்தியாவுக்குச் சென்றுவிட்டனர். (ம-இ)

**சம்பந்தன்:** உள்ளூர் விமானசேவை படுமோசமாக உள்ளது. சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திரு. ஜேப்போல் மோசமாக உள்ளது. விமானநிலையத்தின் தோற்றங்கூட நல்ல நிலையில் இல்லை.

## சிறை அனுபவம் பற்றி 'அமிர்'

(கொழும்பு)

அரசியல் காரணங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்ட நான் 1958ம் ஆண்டு யாழ். சிறைச்சாலையில் 2 வாரச் சிறைத் தண்டனை அனுபவித்தேன். அப்போது எனது அறைக்கருகே இருந்த அறையில் ஜக்கடையா என்ற கைதி இருந்தார். அவர் நிலத்தில் கிடங்கு ஒன்றில் கஞ்சா, அபின் ஆகியவற்றை வைத்து எடுத்து பாவித்தார்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தேசிய அரசுப் பேரவையில் கூறினார்.

மற்றைய எம். பி.க்களுக்கு சிறை அனுபவம் இருக்குமோ என்னவோ தெரியவில்லை. தமக்கு ஒரு தடவை சிறையிலும் 2 தடவைகள் தடுப்புக்காவலிலும் இருந்த அனுபவம் உண்டு என்றும் 'அமிர்' கூறினார் (ம இ]

## காங்கேசன்...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

### பஸ்ஸில் பாதுகாப்பாக செல்லலாம்

உள்ளூர் விமானங்களில் செல்வதைவிட இ. போ .ச. பஸ்களில் பாதுகாப்பாகவும் விரைவாகவும் செல்லமுடியும் (சபையில் சிரிப்பு](ம-இ)

ஏட்லிபெரேரா உள்ளூர் விமானத்தில் ஏறுவதானால் செபமாலையுடன்தான் செல்வார்.

**விமலாகன்னங்கரா:** 3மாத அவகாசம் தாருங்கள் சிறந்த விமான சேவைக்கு வழிவகுக்கிறேன்,

**சபாநாயகர்:** பழைய கருவிகள்தான் நல்லநாதம் பேசும்.

**சம்பந்தன்:** அவற்றுக்கு எண்ணை போடவேண்டும்.

## நீதிமன்றம் சென்றவர் கோரக்கொலை

(கொழும்பு.)

நீதிமன்றத்துக்குச் சென்றுகொண்டிருந்த சொக்கலிங்கம் (வயது 30) என்புவரை வழியில் வைத்து அறுவர் கைக்குண்டு வீசி, வாளால் வெட்டிக்கொன்றார்களாம்.

மர்மக் கொலைஞர்களைப் பொலிசார்தேடிவருகின்றனர்.

இச்சம்பவம் பாலத்துறையில் நடைபெற்றுள்ளது. ]உ]

## காணவில்லை



யாழ்.மத்திய கல்லூரி மாணவரும் சு. சிவகடாட்சத்தின் இரண்டாவது புதல்வருமான லக்ஷ்மன் 09-12-1977 மாலை 07 மணியளவில் காணாமல் போய்விட்டார். இவருக்கு வயது 11, இவர் பற்றிய விபரம் தெரிந்தோர் யாழ் பொலிஸ் நிலையத்திலோ 43 சப்பல் வீதி யாழ்ப்பாணம் (தொலைபேசி 7666, 7729) எனும் முகவரியிலோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

அப்பா, அம்மா, அக்காமார், அண்ணன், தம்பி மிகவும் கவலையுடனும், கண்ணிருடனும் ஆவலுடனும் எதிர்பார்க்கிறார்கள். மண்நிற காற்சட்டையும், வெள்ளை நிற சேட்டும் அணிந்திருந்த இவர் பற்றிய தகவல் கொடுப்போருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

திரு., திருமதி
சிவகடாட்சம்.
7899


சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு





இப்பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No 49, Jaffna Telegram Eelanaadu. Telephone 389. Registered as News paper in Sri lanka.